ரூபா விலை 1-00

MASTER
INSTITUTES
B.M.C. லேன், யாழ்ப்பாணம்.
A/L விஞ்ஞானம்
வார இறுதி வகுப்பு
ஆரம்பம்: 8-1-83
5728

# ஈழநாடு
THE EELANADU

C. E I part I [May 1984]
/London Eng neering
பல்கலைக்கழக அனுமதிகிடைக்காத இருபாலாரிடமுமிருந்து கிழமை நாட்களில் நடைபெறஇருக்கும் வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
முடிவு திகதி 20-1-83
C. E I. Part 2
(Elcetrical/Electronic/Mech.)
நடைபெறுகின்றன.
விபரத்துக்கு:
JAST (சாந்தி சினிமாவுக்கருகில்)
22, இராமையாச் செட்டியார் லேன்,
யாழ்ப்பாணம். (5727)

மலர் 25 மார்கழி 23 ரபி-அவ் 22 இதழ் 330
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7—1—83

## 4-ம் எதிரி சிவபாதன் மாஸ்டரின்
# குற்றஒப்புதல்வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளலாம்!

### நடவடிக்கை

(கொழும்பு)
சீனியை கூடுதலான விலைக்கு விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
(8-ம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கு: விசாரணைக்குள் விசாரணையில் தீர்ப்பு

(இ. கந்தசாமி)
நீர்வேலி கொலை, கொள்ளைவழக்கில் நான் விசாரணையில் சாட்சியகாவது எதிரியான சிவபாதன் மாஸ்டர் கொழும்பு டர் பொலிசாருக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்று மேல்நீதிமன்ற நீதபதி திரு. சி. எல். டி. மூனமலை நேற்றுத் தீர்ப்பளித்தார்.

1981-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி ஏ. எஸ். பி. ஜெயராம்பதி முன்னிலையில் நான்காம் எதிரி சிவபாதன் மாஸ்டர் அளித்த வாக்கு மூலத்தை இவ்வழக்கு விசாரணையில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்று எதிர்தரப்புச் சட்டத்தரணி என். சந்திரகாசன் நீதிமன்றத்தில் கிளப்பிய பிரச்னையைத் தொடர்ந்து, விசாரணைக்குள் விசாரணையாக 'வொயர்-டயர்' என்ற தனியான ஒரு விசாரணையை நீதிபதி மூனமலை நடாத்தினர்.

இவ்விசாரணையின்போது இருவர் சாட்சியமளித்தனர். எதிர்த்தரப்பில், முதலாம் எதிரி தங்கத்துரையும், அரசதரப்பில் ஏ. எஸ். பி. ஜெயராம் பதியும் சாட்சியங்களை வழங்கினர். சாட்சியங்களை அடுத்து

(8-ம் பக்கம் பார்க்க)

## மாலினி கொலை வழக்கு: தொடர் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(கிளிநொச்சி)
ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபன கணக்காளர் திரு மகேந்திரனின் மனைவி மாலினியின் கொலைவழக்கின் தொடர் விசாரணை அறிக்கையை குற்றப் புலனாய்வுத் தலைமை அலுவலகம் உடனடியாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்று கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் ரி. ஜோகநாதன் பணித்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஒரு தந்தைக்கும் மகனுக்கும் வசாவிளானில் ஏற்பட்ட பயங்கர அனுபவம்

(மாவிட்டபுரம்)
வாலிபர் ஒருவரைப் பலாத்காரமாகக் கடத்திச்சென்று இரண்டுதினங்கள் அறைஒன்றினுள் பூட்டிவைத்து வாள்முனையில் பயமுறுத்தப்பட்டாராம். அவரது தந்தையையும் வேறு ஒரு இடத்தில் அறை ஒன்றினுள் தடுத்துவைத்தனராம். காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் இப்பரபரப்பூட்டும் சம்பவம் நடந்துள்ளது. காங்கேசன்துறைப் பொலிசார் இது தொடர்பாக நடத்திய விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாவது:-

வசாவிளானிலுள்ள ஒரு கடையில் நாரந்தனை வடலைச் சேர்ந்த பதினேழுவயது வாலிபர் விற்பனை உதவியாளராகப் பணியாற்றிவந்தார். கடந்த மாதத்துடன் அவர்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆந்திரா, கர்நாடகம், திரிபுராதேர்தல் ராமராவ் கட்சி முன்னணியில் குண்டுராவ் தோல்வி!

புதுடில்லி, ஜன, 6
ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தலில் இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளில் ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்குக் கட்சிக்கு 64 இடங்களும், இந்திரா காங்கிரசுக்கு 32 இடங்களும், பாரதீய ஜனதா கட்சிக்கு ஒரு இடமும் கிடைத்துள்ளது.

### ராமராவ் வெற்றி

பிரபல திரைப்பட நடிகரும் தெலுங்குக் கட்சித் தலைவருமான திரு. என். டி ராமராவ் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள திருப்பதித் தொகுதியில் 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றுள்ளார்.

### ஈஸ்வரரெட்டி தோல்வி

இவருடன் போட்டியிட்ட ஆந்திரப் பிரதேச சட்டசபை சபநாயகரும், இந்திரா காங்கிரஸ் வேட்பாளருமான திரு. ஈஸ்வரரெட்டிதோல்வியடைந்துள்ளார்.

### கர்நாடகத்தில்...

கர்நாடக மாநிலத்தில் அறிவிக்கப்பட்ட 61 முடிவுகளில் இந்திரா காங்கிரசுக்கு 27 இடங்களும், ஜனதா கட்சிக்கு 25 இடங்களும், சுயேச்சைகளுக்கு நான்கு இடங்களும், இதர கட்சிகளுக்கு 4 இடங்களும், அ. தி. மு. க விற்கு ஒரு இடமும் கிடைத்துள்ளது.

### குண்டுராவ் தோல்வி

இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கர்நாடக முதலமைச்சர் திரு. குண்டுராவ் இத்தேர்தலில் சோமவாரத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்துள்ளார்.

இவரை ஜனதாக்கட்சி வேட்பாளர் திரு ஜீ. ஜெயா

[8-ம் பக்கம் பார்க்க]

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)
கொழும்பு தலைமையகத்தில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 915 வது சுவீப்பின் முதல் மூன்று முடிவுகளும் வருமாறு:-

முதலாவது பரிசு
23 E 0219
ரூ. 2,00,000

இரண்டாவது பரிசு
20 X 0811
ரூ. 75, 000

மூன்றாவது பரிசு
01 N 0688
ரூ. 25, 000

## "கைலாஸ் தமிழினத்தின் சொத்தாகிவிட்டார்!"

### பேராசிரியர் சிவத்தம்பி புகழாஞ்சலி

[யாழ்ப்பாணம்]
"இலக்கியத்துக்கும், கல்வித்துறைக்கும், ஆய்வுத்துறைக்கும், மற்றும் பலவேறு துறைகளிலும் மறைந்த கைலாஸ் ஆற்றியபணி அளப்பரியது; ஆனாலும் இன்று ஒரே நோக்கில் பார்த்தால் அவர் மறைவு தமிழ் இனம் முழுவதையும் ஈர்த்துள்ளது. இன்று அவர் தமிழினத்துக்குச் சொந்தமானவராகி விட்டார்."

இவ்வாறு மறைந்த பேராசிரியர் கைலாசபதிக்கு அஞ்சலி செலுத்து முகமாக யாழ் வீரசிங்கம் மண்டபத்தில், நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டத்தரணியும், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவரும், தினகரன் பிரதம ஆசிரியருமான திரு இ. சிவகுருநாதன் தலைமையில் இந்த அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு முன்பாக மறைந்த கைலாசபதியின் திருவுருவப்படம் யாழ்ப்பாணம் தினகரன் காரியாலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, விழா மண்டபத்தை அடைந்தது இரத பவனியாக கொண்டு செல்லப்பட்ட திருவுருவப் படத்துக்கு யாழ் வீதிகளில் பூரணகும்பங்கள் வைத்து, மாலை அணிவித்துப் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

வீரசிங்கம் மண்டபத்தில், கைலாசபதியின் திருவுருவப் படம் சபையோர் பார்க்கும் வகையில் மேடையில் வைக்கப்பட்டிருந்தது.

மறைந்த பேராசிரியர் குடும்பத்தினரும், பேராசிரியர்களும் நண்பர்களும் மலர் அஞ்சலி செலுத்தினர்.

பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது: "எதிர்காலச் சாதனைகளுக்கு வித்திட்டவர் கைலாசபதி; அவர் எழுத்துக்களும், பணிகளும், நடவடிக்கைகளும், எதிர்காலத்துக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன. அவரோடு கடந்த 30 ஆண்டுகாலம் ஒன்றுபட்டு, ஒரே கருத்தோடு செயல்பட்டு வந்தவன் நான்.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசுகையில், முப்பது ஆண்டுகாலம் எனது மாணவனாக, என்னோடு விரிவுரையாளராக இருந்துவந்திருக்கிறார்.

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஹிற்றுச்சி ரி வி 28'' விலை 25 000/- Nordmende டெக் விலை 17000/- உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. செல்வராஜா (ஆசிரியர்), G. P. S. வீதி. கல்வியங்காடு. (5749)

புலோப்பளையில் 15 ஏக்கர் தென்னைச் செய்கைக்கு ஏற்ற நிலம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விண்ணப்பிக்க, விளம்பர இல 5742, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம், (5742)

தும்பளையில் தோட்டக் காணி 14 பரப்பு விற்பனைக்குண்டு விபரங்களுக்கு விண்ணப்பிக்க: விளம்பர இல 5741 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (5741)

கிளிநொச்சி இராமநாதபுரம், பேரம்பலம் கமத்தில் பிரதான வீதியில் 2 ஏக்கர் வெறும் காணி உறுதியுடன் விற்பனைக்குண்டு விலை 20000/- 273/12, ஸ்டென்லி லேன், யாழ்ப்பாணம். போன்: 23075 (5758)

மருதனமடம் இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக K K S. வீதியை முகப்பாகக் கொண்ட 5 பரப்புக் காணி கூடிய விலைக் கோரிக்கைக்கு கொடுக்கப்படும். விபரங்களுக்கு: சு. ஸ்ரீகாந்தா, முத்துக்கிருஷ்ணர் ஒழுங்கை, சுன்னாகம். (5755)

சகல வசதிகளும் கொண்ட கல்வீடு 2½ பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் P சுப்பிரமணியம், No; 58, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். 5723

## கல்வி

வீடுதோறும் சென்று ஆங்கிலம் பேச G.C.E சாதாரண உயர்தர வகுப்புகளுக்கும் வெளிநாடு செல்ல இருப்போருக்கும் இலக்கணத்துடன் பட்டதாரி ஆசிரியையால் கற்பிக்கப்படும். மணித்தியாலத்துக்கு ரூ. 5/- விண்ணப்பிக்க. விளம்பர இல 5757 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 5757

## வகுப்புகள்

G C E (A/L) (கலை, விஞ்ஞானம், வர்த்தகம்), G C E (O/L) Typing and Shorthand (Pitman's Institute) வார பகல் நேர வகுப்புகளும், G S Q. B Sc (Bio, Phy and Statics) G A Q, B A, First in Comm; B Com., வார் இறுதி வகுப்புகளும் 9-1-1983 இல் ஆரம்பமாகின்றன எமது விஞ்ஞான ஆய்வுகூடம் பட்டப்படிப்புவரை அங்கீகரிக்கப்பட்டுள்ளது விபரத்துக்கு உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 5747

Scientific Cutting Hair CakeStyles Beauty Treatment, King and Decoration ஆகிய வற்றிற்கு வகுப்புகள் நடைபெறுகின்றன சேரவிரும்புவோர் ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி The Ladies Academy 4, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக) யாழ்ப்பாணம். 5754

## தேவை

லிகிதர் ஒருவர் உடன் தேவை இன்று 5—6 மணிக்கிடையில் நேரில் வரவும் யாழ் மாநகரசபை எல்லைக் குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது (41 253 1/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5751)

பெண்களுக்கு தையல் வகுப்பு நடாத்துவதற்கு யாழ் பஸ் நிலையத்திலிருந்து அரை மைல் சுற்றுடலுக்குள் அறை தேவை, வீட்டின் பகுதியாகவும் இருக்கலாம்) விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் K கனகசுந்தரம், 28, Convent Road, யாழ்ப்பாணம். 5739

## அறிவித்தல்
### மின் விநியோகம்

1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி சனிக்கிழமை காலை 7-30 மணி தொடக்கம் மாலை 6-30 மணி வரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு அனுராதபுரம் — யாழ்ப்பாணம் 132, கே. வி. மின் மார்க்கம் துண்டிக்கப்பட விருப்பதால் கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், துணுக்காய், சுன்னாகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வேலணை போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி யாழ் பிரதேசங்களின் பெரும்பாலான பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மின் பொறியியலாளர்
(யாழ் பிரதேசம்),
இலங்கை மின்சாரசபை,
(5726) சுன்னாகம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

உடுவில் ரேட், மானிப்பாயைச்சேர்ந்த செல்லையா காசிநாதர் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல.T/3593

செல்லையா காசிநாதர் மைம்பெண் பாக்கியரத்தினம், உடுவில் ரேட், மானிப்பாய்.

மனுதாரர்

மேற்குறித்த இலக்கங் கொண்ட தத்துவ வழக்கு மேற்காணும் இறந்தவரின் மரணசாதனமெழுதாத சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அவர்கிணக்கப் பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள எவரும் 1983 ஆண்டு தை மாதம் 7ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதுக்கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

1982 ஆண்டு ஆவணி மாதம் 30ந் திகதியாகிய இன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்
வை. ச. செந்திநாதன்
மனுதாரரின் சட்டத்தரணி
5730

# கிராமோதயசபை எடுத்த நடவடிக்கை பலனளித்தது!

(மட்டுவில்)

''கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டுள்ள கிராமோதய சபைகளினுல் உள்ள பயன் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் மட்டுவில் நுணுவில் கிராமோதய சபைத் தலைவர் திரு. இளையதம்பியின் செயல்கள் அமைந்துள்ளன''.

இவ்வாறு மட்டுவில் நுணுவில் கிராமோதய சபையின சார்பில், அங்குள்ள பொதுமக்களின் பாவனைக்காக அமைக்கப்பட்ட குழாய்க்கிணற்றைப் பாவனைக்குத் திறந்து வைத்து உரைநிகழ்த்திய சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் கூறினர்.

மட்டுவில் நுணுவில் கிராமோதய சபைத் தலைவர் திரு கே. இளையதம்பி ஆசிரியர் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து இக்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி என். நவரத்தினம் ஒதுக்கிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் சுமார் 10 000 ரூபா செலவில் இது அமைக்கப்பட்டது இதை சம்பிரதாயப்படி, சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் திரு. கா. வே. முத்துக்குமாரசாமி மங்கள விளக்கேற்றி வைக்க சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் திறந்து வைக்க சாவகச்சேரி கச்சாய் பகுதி கிராமாந்தர அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி திரு ரீ. நடராஜா, குழாய் கிணற்றின் உபகரணத்தை இயக்கி நீர் விநியோகித்தலை ஆரம்பித்து வைத்தார்.

## மன்னாரில் நடந்த புத்தாண்டு போட்டிகள்

[மன்னார்]

எருக்கலம்பிட்டி ஸ்ரூவர்ஸ் சனசமூக நிலையமும் ஹமீதியா சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய புத்தாண்டு தின விளையாட்டு விழா எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்புத்தாண்டு தின விழாவில் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், படகோட்டம், நீச்சல், 3 சில்லு சைக்கிள் ஓட்டம், 1500 மீற்றர் ஓட்டம், விநோத உடை, சங்கீதக் கதிரை, மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம், முட்டி உடைத்தல், அஞ்சலோட்டம், தலையணைச் சண்டை, முதியோர் ஓட்டம், சந்தைக்குச் செல்லல், உத்தியோகத்தர்களுக்கான பின்னோக்கி ஓடுதல், கயிறு இழுத்தல் போன்ற பல விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன.

## நாச்சியார் நான்மணிமாலை நூல் வெளியீடு

(அரியாலை)

''குருவருளும் திருவருளும் நிரம்பப்பெற்றதன் பயனுகக் கவிஞர் நாக. பரமசாமி அம்பிகையின் திருவடியில் நாச்சியார் நான் மணி மாலையைச் சாற்றி மகிழும் பேறு பெறுகிறார். சொல்லும் பொருளும் சேர்ந்து பக்திச் சுவையும் நிரம்பி வழியும் இந்நூல் யாவருக்கும் பெரும் பயன் அளிக்க வல்லது. அம்பிகையின் அருள் நோக்குப் பெற்றிருப்பவரை ஆற்றுப்படுத்துகிறார் நூலாசிரியர்''

இவ்வாறு நல்லை ஆதீனக் குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற ''நச்சியார் நான்மணி மாலை'' நூல்வெளியீட்டுவிழாவில் அருளாசி வழங்குகையில் குறிப்பிட்டார்.

வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற விசேஷ விழாவில் இந்த நூல் வெளியிடப்பட்டது.

புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு வ. சின்ன பு. திருவாளர்கள் பாலகிருஷ்ணன் ஆச்சாரி, ஆ செல்வநாதன், வெ. தர்மநாயகம், ஆ தனபாலர் ஆகியோர் பிரதிகளைப் பெற்றனர்.

## நீர்வேலி காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்கம்
## பதவி வெற்றிடம்

1. பதவி: மொத்த நிலையத்தின் களஞ்சியப் பொறுப்பாளர்
2. வயது: 25 — 35 வரை
3. கல்வித்தராதரம்: க. பொ. த. ப. (சாதாரண பயிற்சியில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றுள்ளதும் கூட்டுறவுப்பயிற்சி சாதாரண தராதரமும்.
4. அனுபவம்: இரும்பு விற்பனை நிலையத்தின் அனுபவம்.
5. சம்பளம்: கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவின் நியமனப்படி வழங்கப்படும்.
6. பிணை: ரொக்கப்பிணை ரூபா 3000/- உறுதி பிணை ரூபா 5000/-
7. விண்ணப்ப முடிவு திகதி: 1983-01-20
8. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

தலைவர்,
காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்கம்,
நீர்வேலி. (5745)

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

பதிவு செய்யப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சபைகள், வீடமைப்புத் திட்டச் சங்கங்கள், தனிப்பட்ட ஒப்பந்தகாரர்கள், ஏனையோர்கள் ஆகியோரிடமிருந்து யாழ்ப்பாண மாவட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு கொங்கிறீற் கற்கள் விநியோகம் செய்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ் மாவட்ட கேள்விச் சபைத் தலைவரினுல் 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ந் திகதி பிற்பகல் 3-30 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவங்களை இவ் அலுவலகத்தில் மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 500/-யும், மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 25/-யும் 21-1-83-ம் திகதி வரை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்

கேள்விகளுக்கு பதிச்செய்ய விரும்புபவர்கள் கேள்விப்பத்திர நிபந்தனைகளை
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
மாவட்ட முகாமையாளர்,
விடுதிக்கட்டிடம், காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்திடமிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

| | கட்டிடப் பொருளின் விபரம் | 1983-ம் ஆண்டிற்கான தேவைப்படும் தொகை |
|---|---|---|
| 1. | கொங்கிறீற் கற்கள் | 595189 கற்கள் |

குறிப்பு:

கொங்கிறீற் கற்கள் — அளவு 12'' 6'' 5''

| கலவை அளவு: | |
|---|---|
| சீமெந்து | 1 |
| மணல் | 4 |
| 3/4'' கிறசர் சல்லி | 8 |

தண்ணீரில் 7 நாட்கள் ஊற விடப்படுதல் வேண்டும். விநியோகம் பெப்ரவரி 83 தொடக்கம் ஜூன் 83 வரையான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதிக்கான பெறுமதி வாய்ந்த பிரத்தியேகக் கேள்விகள் பின்வரும் அடிப்படையில் கோரப்படுகின்றன.

அ. சீமெந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைக்கப்பெறும் சீமெந்தின் விலையில்.
ஆ. வெளிச் சந்தைகளிலிருந்து கிடைக்கப்பெறும் சீமெந்தின் விலையில்,
இ. ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி போன்ற சகல செலவுகளும் உட்பட 1000 கொங்கிறீற் கற்களை உற்பத்தித் தொழிற்சாலையிலிருந்து வீடமைப்புத் திட்டங்களுக்கு ஏற்றிச்செல்வதற்கான வாகனக்கூலிமைலுக்கு/மைல்களுக்கு,
ஈ. மாதாந்த உற்பத்தியும் விநியோகத்துடனும் உற்பத்தித் தொழிற்சாலையின் முகவரியும் குறிப்பிடப்படல் வேண்டும்.

மாவட்ட முகாமையாளர்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.
(5736)

# ★ ஆந்திரா, கர்நாடக, திரிபுரா
# மாநிலத் தேர்தல் - 3 தொகுதிகளில் 2-ல் இந்திரா காங்கிரஸ் வெற்றி!

## கர்நாடக சாந்திநகர் தொகுதியில் ஜனதா அதிபெரும்பான்மையுடன் வெற்றி!

புதுடில்லி ஜன 6

கர்நாடக, ஆந்திரா, திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கான சட்டசபைத்தேர்தலில மூன்று தொகுதிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன

இந்த மூன்று தொகுதிகளில் இரண்டில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. ஒன்றில் ஜனதா கட்சி வெற்றி பெற்றது.

ஆந்திராமாநிலத்தில் இந்திரா காங்கிரஸ்வெற்றிபெற்ற தொகுதியில் இக்கட்சி சார்பில் திரு. சங்கர்ராவ் என்ற அபேட்சகர் போட்டியிட்டார். இவர் தெலுங்குக்கட்சியைச் சேர்ந்த திரு. பி. ஆர். கிருஷ்ணனை மூவாயிரம் அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார்.

திரிபுரா மாநிலத்தில் முடிவு வெளியாகியிருக்கும் தொகுதியிலும் இந்திரா காங்கிரஸ் அபேட்சகரே வெற்றியீட்டியுள்ளார்.

கர்நாடக மாநிலத்தில் சாந்திநகர் தொகுதியிலேயே இந்திரா காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஜனதாகட்சி இத்தொகுதியில் பெருவெற்றி பெற்றுள்ளது. இக்கட்சி இங்கு பெற்றுள்ள பெரும்பான்மை வாக்குகள் இதுவரை வெளியான சகல பெரும்பான்மை வாக்குகளிலும் அதிகமானதாகும்.

சாந்திநகர் தொகுதியில் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் அபேட்சகர் திரு. பி. கே. ரங்கநாதன் 14000 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். ஆனால் ஜனதாகட்சி வேட்பாளர் இவரை 29,300 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார்.

ஆந்திரா மாநிலத் தொகுதியில் நேற்று 60 வீதமான வாக்குகள் பதியப்பட்டன. திரிபுராவில் 70 வீதமான வாக்குகள் பதியப்பட்டன கர்நாடகம் பற்றிய விபரம் தெளிவுபடுத்தப்படவில்லை

இம் மூன்று மாநிலங்களுக்குமான வாக்குகள் எண்ணப்படுதல், முடிவுகளை அறிவித்தல் போன்றன எலெக்ரோனிக் முறைகொண்டே கையாளப்படுகின்றது.

முதல் முறையாகவே இம் மாநிலத்தேர்தல்களில் எலெக்ரோனிக் பாவனை இவ்வாறு செயல்படுத்தப்படுகிறது.

முடிவுகள் வெளியான தொகுதிகளில் நேற்று மாலை நான்கு மணிக்கு வாக்குகள் எண்ணப்படுவது ஆரம்பமானது. சரியாக நான்கு மணித்தியாலயங்களின் பின்னர் முடிவுகள் வெளியிடப்பட்டன. (கி)

## பனி மழைக்கு இதுவரை 138 பேர் பலி!

புதுடில்லி ஜன 6

உத்திரபிரதேசிலும் பீகாரிலும், பனிமழைபொழிவினாலும் கடும் குளிருக்கும் மேலும் 40 பேர் பலியாகியுள்ளனர். இதுவரை 138 பேர் பலியாகியுள்ளனர். (க)

## அரசியல்வாதி அதிகாரியைத் தாக்கினாராம்!

(காலி)

கதிர்காமம் பகுதியிலுள்ள யானை தேசியவனத்தின் நிர்வாகி திரு ஈ.டி. டயிற் என்ற அதிகாரியை விசேஷ சலுகை அளிக்கத் தரப்படவில்லை என்ற காரணத்தால் கேகாலைப்பகுதி அரசியல்வாதியொருவர் இந்த நிர்வாகியைத் தாக்கினாராம். தாக்குதலுக்கு இலக்கான இவர் தற்போது மாத்தறை அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் மாத்தறை பொலிசாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதாவது:

கடந்த ஜனவரிமாதம் 1ம் திகதி நன் மாத்திரமே யானையின் கடமையில் ஈடுபட்டிருந்தேன் வழிகாட்டிகளும், ஏனைய அதிகாரிகளும் அன்று அங்கு இருக்கவில்லை. அன்று வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் நம் நாட்டு மக்களும் தேசிய வனத்தைப் பார்க்க வந்திருந்தனர்.

அப்போது கேகாலைப்பகுதி அரசியல்வாதியான மேற்குறிப்பிட்ட அரசியல்வாதியும், அவரது நண்பர்களுமாக 12 பேர் அங்கு வந்தனர். இந்த அரசியல்வாதி தனக்கு உடனே விசேஷ பாஸ் தரவேண்டும் எனக் கேட்டதோடு, வழிகாட்டி ஒருவரையும் எப்படியேனும் தரவேண்டும் எனக் கூறி அடம்பிடித்தார். நான் எனது இக்கட்டானநிலை குறித்து அவருக்குஎடுத்துரைத்தேன்.

"வெள்ளையனுக்கு மாத்திரமா இங்கு சலுகை? சிங்களவனுக்குக் கிடையாதா? எனக் கேட்டு அந்த அரசியல்வாதி என்னைத் தாக்கவே அவருடன் வந்த ஏனையோரும் என்னைத் தாக்கினர்.

"நான் இதுபற்றி உடனே வனபரிபாலன அதிகாரிகளுக்குத் தெரிவித்தேன்"

இந்த நிர்வாகி தாக்கப்பட்டது சம்பந்தமாக திஸ்ஸமஹாராமை பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது திரு. வயிற மாத்தறை பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றார்.

## இரு பரீட்சைகளில் சித்தி

[வவுனியா]

கடந்த வருடம் இலங்கை ஆயுர்வேத வைத்திய சபையினால் நடத்தப்பட்ட பரீட்சையில் வவுனியாவைச்சேர்ந்த திருமதி யோகேஸ்வரி பாலசிங்கம் சித்த ஆயுர்வேத வைத்தியாகச் சித்தியடைந்து பதிவு செய்யப்பட்டுள்ளார், அத்துடன் இவர் இலங்கை விஷவைத்திய சபையினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட பரீட்சையிலும், விஷவைத்திய பண்டிதைப் பட்டம் பெற்றுள்ளார்.

வவுனியா அரசினர் வைத்தியசாலையில் தாதியாகப்பணியாற்றும் திருமதி யோகேஸ்வரி வவுனியா மாவட்டத்திடீர் மரண விசாரணை அதிகாரியும், சமாதான நீதிபதியும், இ. தொ. கா. வவுனியா மாவட்டத் தலைவருமான டாக்டர் எஸ் கே பாலசிங்கத்தின் துணைவியாராவர். (வ)

### உலக வங்கி
## கடன் தொகைக்கான வட்டியைக் குறைக்கும்!

வாஷிங்டன், ஜன. 6

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு உலகவங்கி வழங்கும் கடன் தொகையின் வட்டி வீதம் குறைக்கப்படவுள்ளது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் செலவீனங்கள் குறைவடைந்து வருவதும், தற்போது நிலவும் பணவீக்கமுமே உலகவங்கி தனது வட்டி வீதத்தைக் குறைக்க காரணமென்று தெரிவிக்கப்பட்டது

இதுவரைகாலமும் உலகவங்கி தனது கடன் வழங்குதொகைக்கு 11 43 சதவீத வட்டியையே அறவிட்டுவந்தது. இனிமேல் 10. 97 சதவீதமே அறவிடப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகவங்கியின் ஓர் அங்கமாகவுள்ள சர்வதேச நாணய நிதிநிறுவனம், கடன் வழங்கலை விஸ்தரிக்கும்பொருட்டு சவூதிஅரேபியாவிடமிருந்து கடன்பெறவுள்ளது.

இந்த நிறுவனம் இதன் பொருட்டு தூதுக்குழு ஒன்றினை சவூதிஅரேபியாவுக்கு அனுப்பிவைக்கிறது. இக்குழுவினர் 400 முதல் 500 கோடி டாலர்களை சவூதியிடமிருந்து பெறுவதற்கான பேச்சுக்களை நடத்துவர். சவூதிஅரேபியா எற்கனவே 800 கோடி டாலர்களை சர்வதேச நிதிநிறுவனத்துக்கு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

## சுறுக்களிடம் தப்பிய பெண் சுழியோடி!

கன்பரா, ஜனவரி 6

ஒரு இளம்பெண் சுழியோடி சுறுமீன்களின் கண்களுக்குத் தப்பி பாதுகாப்பாகக் கரையேறியுள்ளார்!

இச் சம்பவம் அவுஸ்திரேலியாவின் வடக்குக் கரையோரப்பகுதியில் இடம்பெற்றுள்ளது!

'சுசான் டொக்கர்' என்ற 28 வயதான பெண் சுழியோடியே இவ்வாறு உயிர் தப்பினர்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர் சுழியோடும் போட்டி ஒன்றில் கலந்துகொண்டிருந்தார்! சுழியோடிகளுக்கான ஆடையையும், உபகரணங்களையும் இவர் அணிந்திருந்தார்!

ஆனால் இவர் போட்டியில் கலந்துகொண்டிருந்த வேளை பயங்கரச் சுழியொன்றினால் இழுத்துச்செல்லப்பட்டார்!

இவ்வாறு கொண்டுசெல்லப்பட்ட இவர், தமது உபகரணங்களையும் சுறுக்களின் மோப்பத்திலிருந்து தப்புவதற்கான தமது உடையையும் இழந்தார்!

அத்துடன் தாம் பல பயங்கரச் சுறுக்கள் நிறைந்துள்ள வலயத்தில் சிக்குண்டிருப்பதையும் உணர்ந்தார்.

கலக்கமடையாது, தமது அனுபவங்களின் துணையுடன் அவுஸ்திரேலியாவுக்கு 40 மைல்கள் தொலைவிலுள்ள 'ஏர்ஸ்கின்' என்ற தீவை இவர் நெடுந்தூரம் நீந்தி அடைந்தார்!

இத் தீவில் இவர் இரு தினங்கள் கடல்ஆமை முட்டைகளையே உண்டு பசியைப் போக்கினர்.

இவரைத் தேடிச் சென்றோரும், போட்டி ஏற்பாட்டாளர்களும் இவர் இறந்திருப்பாரென்றே முடிவு செய்தனர்!

ஆனால் ஹெலிகாப்டர் தேடுதலின்போதே இவர் கண்டுபிடிக்கப்பட்டு தாயகம் கொண்டுவரப்பட்டார்!

"அதிகளவு மீன்கள் இருந்ததால் 'சுறுக்கள்' அவற்றை வேட்டையாடுவதிலேயே ஈடுபட்டிருந்தன இதனால் நான் தெய்வாதீனமாக உயிர்தப்பினேன்" என்றார் இந்த சுழியோடி வீராங்கனை. [கி]

## 'புளோரஸிஸ்' வியாதிக்கு 'பழுத்தபுளி' அருமருந்து!
### - இந்திய விஞ்ஞானி

திருப்பதி, ஜன 6

'புளோரஸிஸ்' வியாதிக்கு நன்கு பழுத்த புளி சிறந்த மருந்து என்று இந்திய மருத்துவ விஞ்ஞானி ஸ்ரீ ராமாச்சாரி தெரிவித்துள்ளார்.

தென்னிந்தியாவில்திருப்பதியில் நடைபெற்றுவரும் விஞ்ஞானிகள் மகாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: 'புளோரஸிஸ்' வியாதி தண்ணீரில் புளோரைட் தன்மை அதிகமாகக் காணப்படுவதனாலேயே தோன்றுகிறது.

இந்த வியாதியினால் பற்கள் பாதிப்படைவதுடன், எலும்புகளும் வளர்ச்சியடைவதில்லை. எனவே இந்த வியாதியைக் குணப்படுத்துவதில் புளி அதிக முக்கியம் பெறுகிறது. நன்கு பழுத்த புளியை உபயோகிப்பதன் மூலம் இந்த நோயின் தாக்கத்தை குறைவடையச் செய்யலாம்" என்றார். (கி)

# 'நேட்டோ' நாடுகளுடன் சமாதான ஒப்பந்தம்!
## 'வார்சோ' நாடுகள் அழைப்பு

லண்டன் ஜன 6

சமாதான ஒப்பந்தத்தை 'நேட்டோ' நாடுகளுடன் செய்து கொள்ள 'வார்ஸோ' நாடுகள் முன்வந்துள்ளன.

'வார்ஸோ' ஒபபந்த நாடுகளின் சார்பில் சோவியத் அதிபர் திரு. யூரி அந்திரபோவ் இதனை நேற்றுத் தெரிவித்தார்.

செக்கோஸ்லாவாக்கிய நட்டின் தலைநகரான 'பிராகுவா'வில் 'வார்ஸோ' ஒப்பந்த நாடுகளின் தலைவர்கள் கூடி பேச்சுவார்த்தைகளை நடத்துவது வாசகர் அறிந்ததே

சோவியத் அதிபர் திரு. அந்ரபோவ் 'வார்ஸோ' நாடுகள் நேட்டோ நாடுகளுடன் சமாதான ஒப்பந்தங்களைச செய்துகொள்ள விருப்புவதுடன் ஆயுதக்கட்டுப்பாட்டையும் மேற்கொள்ள விரும்புகின்றன என்றார்.

'வார்ஸோ' ஒப்பந்த நாடுகளில் ஏழு கம்யூனிஸ்ட் நாடுகள் அங்கம் வகிக்கின்ற இந்தநாடுகள் மேற்கண்டவாறுசமாதான ஆயுதப்பரிகரணங்களுக்கு விரும்பம் தெரிவித்துள்ளதை 'நேட்டோ' நாடுகள் பெருமளவு ஆதரிக்கவில்லையென்று கூறப்படுகின்றது.

ஏனெனில் முன்பும் சோவியத் யூனியன் இவ்வாறு அறிவித்துவிட்டு ஆக்கிரமிப்பில் தற்போது இறங்கியுள்ளதென்று அவை காரணங்காட்டின. (கி)

## வவனியாவில் நிலக்கடலை விளைச்சலை அதிகரிக்க நடவடிக்கை

[வவுனியா]

நிலக்கடலை, சோளம், வெண்டி போன்ற பயிர்களுக்கு உரப்பசளை பாவித்து மிக கூடிய விளைவினைப் பெறலாம் என்பதனை வவனியாப் பகுதி விவசாயிகளுக்கு விளக்குவதற்காக விவசாயத்திணைக்களம் பரீட்சார்த்தமாக இங்கு பல விவசாயிகளின் தோட்டங்களில் மாதிரித்துண்டங்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இதே வேளை இங்கு பரீட்

(6-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

கல்வியை வஞ்சக மனம்கொண்டவர்கள் கண்டிக்கிறார்கள்; சாதாரண மனிதர்கள் மெச்சுகிறார்கள்; அறிவாளிகளோவெனில் பயன்படுத்துகிறார்கள்.

— பிரான்சிஸ் பேக்கன்.

# நமது நோக்கு

## அந்நியர் யார்?

"இந்த நாட்டின் வளர்ச்சிக்காக எனது மக்கள் நூறு ஆண்டுகளுக்கு மேலாக வியர்வை சிந்தி உழைத்து வந்திருக்கிறார்கள். அவர்களா அந்நியர்கள்?

இவ்வாறு மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அத்தனகலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடியை பார்த்து பாராளுமன்றத்தில் கேட்டிருக்கிறார். கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான்.

திரு. தொண்டமான் தனது மக்களின் நிலையறிந்து – தமது கடமையுணர்ந்து காலமறிந்து செயல்படுபவர் என்பது பிரசித்தம்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கெதிராக பாராளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு மிகவும் பாரதூரமான விதத்தில் வார்த்தைகள் கொட்டப்பட்ட வேளையில் ஏனைய தமிழ் அமைச்சர்கள் வாய் புதைத்து நிற்க "தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்" என்ற வகையில் அத்தனை சிங்கள அமைச்சர்கள் – உறுப்பினர்கள் மத்தியிலும் துணிச்சலுடன் எழுந்து உணர்ச்சிப் பிழம்பாக நின்று தமிழ்மக்களின் நியாயப் பூர்வமான கோரிக்கைகளைத் தொட்டுக்காட்டி திரு அமிர்தலிங்கத்தின் நிலைப்பாட்டை ஆணித்தரமாக எடுத்தியம்பியவர் திரு. தொண்டமான் என்பதை யாரும் மறப்பதற்கில்லை.

எனவே தம்மை நம்பி நிற்கும் ஒருபெரும் தமிழர் சமுதாயத்தின் நிமித்தம் அவர் ஆவேசம் கொள்வது ஆச்சரியமல்ல.

இந்த நாட்டின் வளர்ச்சிக்காக பல தலைமுறைகளாக உழைத்துழைத்து ஓடாய்த் தேய்ந்துபோன ஒரு சமுதாயத்தை-குனிந்து நின்றே பழகிப் போன ஒரு சமுதாயத்தை இந்த நாட்டின் ஏனைய மக்கள் சமுதாயங்களோடு சரிநிகர் சமானமாக தலைநிமிர்ந்து நிற்கச்செய்வதற்கு திரு. தொண்டமான் பாடுபட்டு வருகிறார் என்பதும் – அதற்காகக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தையெல்லாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்கிறார் என்பதும் வெளிப்படை.

அந்த வகையில் மலையக மக்கள் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களில் வாக்களிக்க வாய்ப்புக்கிடைத்திருப்பதும், அரசாங்கக் காணிகளில் குடியிருக்கும் நாடற்றோர் அக்காணிகளைக் குத்தகைக்குப்பெறும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருப்பதும், ஊழியர் சேவைக்கால பணம் வழங்கல் சட்டவரைவில் தோட்டத் தொழிலாளருக்கு சாதகமான அம்சங்களைச்சேர்க்க திருத்தம் செய்யப்பட்டிருப்பதும் – இதுபோன்ற வேறும் சிலமுக்கிய அம்சங்களைக் சுட்டிக்காட்டலாம்.

முன்னைய அரசாங்கக் காலத்தில் குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் பதவியிலிருந்த காலங்களில் தோட்டத் தொழிலாளர்கள் மூன்றாந்தரப் பிரஜைகளையும்விட கேவலமாக நடத்தப்பட்டார்கள் என்பது பொதுவான குற்றச்சாட்டுக்கு ஓர் உதாரணம்; அணிசேரா நாடுகளின் தலைவர்கள் இலங்கைவந்த வேளையில் அட்டன், தலவாக்கலை பகுதியில் வழிவழியின்றி வீதிகளில் திரிய நேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் அந்தத் தலைவர்களின் கண்களில் பட்டுவிடாமலிருப்பதற்காக பலவந்தமாக லொறிகளில் ஏற்றப்பட்டு மட்டக்களப்புப் பகுதிகளில் கொண்டு போய்விடப்பட்டதைக்குறிப்பிடலாம்.

என்றாலும், நாடற்றவர்கள் என்று இரு தேசங்களாலும் புறக்கணிக்கப்பட்டிருந்த இந்திய வம்சாவளியினரின் பிரச்னையை அங்கீகரித்து அதற்கு முற்றுமுழுதான ஒரு முடிவை ஏற்படுத்த வேண்டும் என்றவகையில் இந்திய அரசுடன் ஓர் ஒப்பந்தத்தை அந்த அரசு ஏற்படுத்திக்கொண்டதை நினைவிற்கொள்ளவேண்டும்.

அதற்கு முன், இந்தப் பிரச்னை – அதாவது இந்திய இனத்தவர்களின் பிரஜாவுரிமைப் பிரச்னையைத் தோற்றுவித்ததே ஐக்கிய தேசியக் கட்சி அரசுதான் என்பதையும் எவரும் பூசி மெழுகமுடியாது. இந்த நாட்டின் ஏனைய இனத்து மக்களையும் போலவே சகல குடியியல் உரிமைகளையும் அனுபவித்துவந்த இம் மக்கள் இந்தியா—பாகிஸ்தானியர் — குடியுரிமை சட்டத்தினால் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டு, அவர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் ஒழிக்கப்பட்டது.

அந்தச்சட்டத்தின்காரணமாகவே அவர்கள் அந்நியர்களாகவும் இழிசனர் போலவும் நடத்தப்பட்டுவந்துள்ளனர்.

இன்று, இந்திய இனத்தவர்களான மலையக மக்கள் திரு தொண்டமானின் கையை மிகப் பலமாகப் பற்றி நிற்பதின்காரணமாக அவர்கள் சார்பில் அவரால் அரசுடன் பேரம்பேசவும் உரிமைகளைக் கேட்டுப்பெறவும் முடிகின்றது ஆனால்...!

இந்தநிலைமைதொடர்ந்து நீடிக்குமா என்பதே எமக்கு எழு சந்தேகம்.

ஏனெனில் கடந்தகால அனுபவங்கள் நம்மை இப்படி சிந்திக்கத் தூண்டுகின்றன.

ஒருவேளை, எதிர்காலத்தில் மாற்றுக்கட்சியொன்று ஏன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியே தானும் பதவிக்கு வரும் சந்தர்ப்பம் நேரில் இந்த மக்களின் நிலை என்னாகும்! இப்போதைய சட்டச் சலுகைகள்யாவும் மாற்றப்படவும் கூடும் அல்லவா?

எனவே தான் திரு. தொண்டமானும், அவரது இலங்கை தொழிலாளர் காங்கிரசும் ஐ. தே. கட்சி அரசை ஆதரித்து வரும் காலங்களில் மாத்திரமன்றி இந்தநாட்டிலுள்ள இந்திய வம்சாவழியினரான மக்கள் அனைவரும் எந்த அரசு பதவியிலிருந்தாலும் எல்லாவிதத்திலும் ஏனைய மக்களுக்குள்ள உரிமைகள், சலுகைகள் அனைத்தையும் பாகுபாடின்றி அனுபவிக்கக் கூடியவர்த்தில நிலைமைகள் உருவாக்கப்படவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம்.

இதற்கு இப்போதைய அரசியல் சட்டவாக்கத்திலேயே ஏற்பாடுகளைச்செய்துகொள்ள முற்படுவதுகூட வரவேற்கத்தக்கது.

சந்தர்ப்பச் சூழ்நிலைகள் இதற்கு வாய்ப்பாக இருக்கின்றது என்றே நாம் கருதுகின்றோம்.

தமிழ் மொழிக்குப் போன்றே ஏனைய

# திராவிட மொழிகளுக்கும் தொல்காப்பியம் அடிப்படை

### தமிழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கருத்து

சென்னை ஜனவரி 6.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொல்காப்பியக் கருத்தரங்கு டிசம்பர் 27, 28, 29 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் வரவேற்புரையாற்றினார்கள். விழாவிற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. ஐ. சுப்பிரமணியம் தமது உரையில் தொல்காப்பியம் தமிழ் மொழிக்கு எவ்வளவு அடிப்படையானதோ அதைப்போன்றே மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளுக்கும் அந்நூல் அடிப்படையானது. ஐந்திர இலக்கணம் பிராகிருத மொழியில் இருப்பதால் வடநாட்டு இலக்கணத்தைதப்பின்பற்றியது என்று கருதலாகாது. தமிழகத்தில் உருவான கொள்கைகள் அதில் காணப்படுகின்றன என குறிப்பிட்டார்.

விழாவைத் தொடக்கி வைத்த முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் தொடக்கப் பள்ளியிலிருந்து கல்லூரி வரை எல்லா வகுப்புகளுக்கும் தொல்காப்பியம் பாடமாக்கப்படவேண்டும் எனவும் தொல்காப்பியருக்குச் சிலை வைக்கவேண்டும், தொல்காப்பியத்தைப் பொதுமக்களிடம் பரப்ப வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட பேராளர்கள் தொல்காப்பியத்தை ஆங்கிலம் மற்றும் பிற உலகமொழிகளிலும் மொழிபெயர்க்கத் தமிழ்ப்பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள்.

தொல்காப்பியமும், சமூக இயலும், தொல்காப்பியப் புத்துரைகள், தொல்காப்பிய உத்திகள் தொல்காப்பிய மொழிபெயர்ப்புகள், தொல்காப்பியமும் பாணினீயமும் மொழியியல் கூறுகள் பொருளதிகார அமைப்பு ஆகியபொருள்கள் பற்றிக் கருத்தரங்கில் ஆய்வு செய்யப்பட்டது.

# மக்கள் சேவையில்

## வடபகுதி லயன்ஸ்கழகம்

- நிர்மலாதேவி கணேசலிங்கம்

[19ம் திகதி கைதடி நவீல்ட் குருடர், செவிடர் பாடசாலையில் நடைபெறவிருக்கும் வடபகுதி லயன்ஸ் கழகக் கருத்தரங்கையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.]

ஒரு வயோதிப மாது தானாகவே அப்பம் சுட்டு விற்றுச் சீவித்து வந்தது. அப்பெண்ணின் கண்கள் சரிவர செயல்படாத காரணத்தால் தான் நடத்திவந்த அந்த வேலையை விடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு லயன்ஸ் கழகத்தினால் கொடுக்கப்பட்ட மூக்குக் கண்ணாடியினால் அப்பெண் தொடர்ந்து தனது தொழிலைச் செய்துவருகிறார். இதேபோன்றே கால் ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கரவண்டியும், காது கேட்காதவர்களுக்கு காது கேட்கபண்ணும் உபகரணமும், மேலும் பல தரப்பட்ட நன்மைகளை மனிதாபிமானமுறையில் லயன்ஸ் கழகங்கள் செய்துவருகின்றன.

வைத்தியத்துறையில் செயற்படுத்தப்படும் நன்மைகள் அளப்பரியன. இலவச கண் பரிசோதனை, கற்றாருக் சத்திர சிகிச்சை, கண்ணாடி வழங்கல், காது பரிசோதனை, இதய பரிசோதனை, நீரிழிவு பரிசோதனை, இரத்தப்பரிசோதனை போன்ற நற்காரியங்களை லயன்ஸ்கழகம் செய்துவருகிறது மேலும் விவசாயத்துறை மீன் வளர்ப்புத்துறை, கல்வித்துறை, சுற்றுடல் பாதுகாப்புத்துறை, குடும்பக்கட்டுப்பாடு, வயோதிபரையும், ஊனமுற்றோரையும் பாதுகாத்தல், தேசிய ஒருமைப்பாடு, ரோட்டுப் பாதுகாப்பு, கிராம ஊக்குவிப்பு, விளையாட்டுத் துறை, மேலும் பல்வேறு துறைகளில் பலதரப்பட்ட நன்மைகளை பொதுமக்களுக்காக லயன்ஸ் கழகங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

சர்வதேச லயன்ஸ் கழகம் ஐக்கிய அமெரிக்காவிலே 1917ம் ஆண்டு மெல்வின் ஜோன்ஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. சேவைசெய்வதே அதனுடைய குறிக்கோள்.

### வடமாவட்டத்தில்

இலங்கையில் 1958ம் ஆண்டு லயன்ஸ்கழகம் புகுத்தப்பட்டது. இது காலகதியில் வளர்ச்சியடைந்து, யாழ்ப்பாணத்தில் 1965ல் உருப்பெற்றது. 1978, 79ம் ஆண்டுகளில் பருத்தித்துறை, தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, சாவகச்சேரி ஆகியஇடங்களில் லயன்ஸ் கழகம் உருவெடுத்தது. இன்று இலங்கையில் கிட்டத்தட்ட 120 லயன்ஸ் கழகங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் யாழ்ப்பாண மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது ஊனமுற்றவர்களுக்கும், வறியவர்களுக்கும், அவசியமானவர்களுக்கும் யாழ். லயன்ஸ் கழகம் மிகவும் உன்னதமாக தமது கடமையைப் புரிந்துவருகிறது. எரிந்துபோன யாழ் மாநகரசபையின் நூல் நிலையத்தின் 'சிறுவர் பகுதியை' சிறந்த முறையில் செப்பனிட்டு அதற்கான கட்டடம், நூல்கள், தளபாடங்கள், உபகரணங்கள் யாவற்றையும் அன்பளிப்பதற்காக 'யாழ். லயன்ஸ் காணிவல்' வைப்பதற்காகஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறது யாழ். லயன்ஸ்கழகம். பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தினர் அண்மையில் நடத்தியுள்ள கண் சத்திர சிகிச்சையை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். வைத்திய கலாநிதி திருமதி சிவயோகம் சிறீஸ்கந்தராசா அவர்கள் 140 மேலான சத்திர சிகிச்சை செய்ததுடன் அவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளையும் இலவசமாக தந்துதவினார். இளைஞருக்கான பொறிமுறைக் கல்வியில் முன்னின்று உழைப்பது வட்டுக்கோட்டைலயன்ஸ் கழகமாகும். அவர்களால் நடாத்தப்படும் "பொறிமுறைக் கல்லூரி"யின் சேவை மகத்தானது. மதுவினால் ஏற்படும் தீங்குகளைமக்கள் முன் வைத்து அதனை ஊர்வலமாக வட்டுக்கோட்டை அடங்கலும் பிரசாரம் செய்த பெருமை வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகத்தையே சாரும். ஊனமுற்றவர்களுக்காக வயதுமுதிர்ந்தோருக்காக தங்கள் செலவிலே உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை உயர்ந்த முறையில் கொடுத்து

(5-ம் பக்கம் பார்க்க)

## வண்ணை சிவன்கோவிலில் இன்று சுப்பிரமுனியர்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கா ஹாவாய் சைவசித்தாந்த திருச்சபைத் தலைவர், அருள்மிகு ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் இன்று காலை 9 30 மணிக்கு வண்ணை சிவன் கோயிலுக்கு வருகை தருவார். இதனைமுன்னிட்டு ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் இடம் பெறும். திருவெம்பாவைப் பஜனையில் பங்குபற்றிய சிறுவர்களுக்குச் சுவாமிகள் பரிசில்கள் வழங்கி அருளுரையும் வழங்குவார். (அ)

# 'அன்பு, நல்லுறவை வளர்க்கிறது'

(மட்டுவில்)

"பல்வேறு மதத்தவர் மத்தியிலும் நல்லுறவையும், அன்பையும் வளர்க்கும் சாதனமாக இந்த நத்தார் புத்தாண்டு விழா அமைகிறது இந்த விழாவில் கிறிஸ்தவ மக்களைவிட சைவமக்களே அதிகம் சமூகமளித்திருப்பதுகண்டு மகிழ்ச்சியடைகிறோம்."

இவ்வாறு நுணாவில் தென்னிந்திய திருசபைச்தேவாலயத்தில் வண. டானியல் தியாகராஜா தனதுதலைமை உரையில் கூறினார்.

மட்டுவில் தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் இந்த வைபவம் நடைபெற்றது. இந்தவிழாவில் பரிசளிப்பு நடைபெற்றது. இந்துமதப் பிள்ளைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன வண. டானியல் தியாகராஜா இந்தப் பரிசில்களை வழங்கினார். வண. டானியல் தியாகராஜா தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:-

"மனிதன் தேவனின் குழந்தைகள். அவர்களிடத்தில் உயர்வு, தாழ்வு கிடையாது இப்படியான அநீதிகளிலிருந்தும், ஒழுக்கமற்ற அடிமைத்தனத்திலிருந்தும் மனித இனத்தை மீட்பதற்காகவே கிறீஸ்து வாழ்ந்து உயிர் நீத்தார். அவரது பாடுகளும், மரணமும் இதற்குச் சான்றாகும். மீட்பாளரான யேசு கிறீஸ்துவின் தெய்வீகப்பணி இதுவாகும்" என்றும் அவர் சொன்னார்.

# சிவனை நினைந்து உலக இந்து மதத்தவர் ஒன்றுபடவேண்டும்

## அமெரிக்க சுவாமிகள் விருப்பம்

(மாவிட்டபுரம்)

"இன்று உலகளாவிய முறையில் இந்து சமயம் பரந்து வளர்ச்சி பெற்றுள்ளது. உலகத்திலுள்ள இந்து சமயத்தவர் அனைவரும் சிவனை நினைந்து ஒன்றுபடவேண்டும். ஆத்மீக வழியில் ஈடுபட்டு அமைதி, சாந்தம் என்பவற்றை வளர்க்க வேண்டும். இந்து சமய வளர்ச்சிக்காகவும், உலகத்தை ஆத்மீக வழியில் இட்டுச் செல்வதற்காகவும் சகல இந்து சமயத்தவரும் ஒன்றுபட்டு பணிபுரிய வேண்டும்."

இவ்வாறு அளவெட்டி சிவலிங்க சுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற தமது 56-வது ஜயந்தி விழாவில் அருளுரையாற்றிய ஸ்ரீ சிவாய சுப்பிரமுனியசுவாமிகள் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

உலகத்திற்கு சிவனே முழுமுதற் கடவுளாக விளங்குகிறார். சிவனை வணங்குவதால் மன அமைதி, துணிவு, நல்லெண்ணம் என்பன ஏற்பட இடமுண்டு. எமது சமய சாத்திரங்கள் இறைவன் எங்கும் நிறைந்துள்ளதாகக் கூறுகின்றன. ஆனால் எமது அஞ்ஞானமும், காம வினையும இறைவனை காண முடியாதவாறு தடுக்கின்றன.

சமயம், தர்மத்தின் அடிப்படையில் வாழுமாறு எமக்கு வழிகாட்டுகிறது. ஆனால் நாமோ கட்டுப்பாடு இல்லாமல் எமது எண்ணம்போல் வாழ்கிறோம். நாமே நமது வாழ்க்கைக்கு கர்த்தாவாக இருக்கிறோம். அதுவும் இந்து சமயத்தில் விடுமுறைகள், கட்டுப்பாடுகள் குறைவாக இருப்பதால் எமது சமயத்தவர்கள் தமது போக்கில் செல்கிறார்கள் இந்நிலை மாறவேண்டும். உலகத்தில் உள்ள இந்து சமயத்தவர்கள் அனைவரும் சிவனை நினைந்து ஒன்றுபடவேண்டும்.

### அன்பே சிவம்

தென் ஆபிரிக்காவில் சிவன் ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. இன்னும் மொறீசியஸ், கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் இந்துசமயம் பரவிவருகின்றது ஒவ்வொரு உலக நாட்டிலும் இந்துசமயம் பரவுவதுடன் குறிப்பாக சிவ வணக்கமும் பரவிவருகின்றது

எமது சமயத்தில் 33 லட்சம் தெய்வங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் முழுமுதற் கடவுளாக சிவனே விளங்குகிறார் மற்றைய தெய்வங்களை வணங்காவிடில் அவை எமக்குத் துன்பத்தைத் தருகின்றன. சிவன் அப்படியல்ல அவர் அன்பே உருவானவர் எமக்கு எல்லாம் வழங்கும் வள்ளலாக இருக்கிறார். எம்மிடமிருந்து எதையும் அவர் எதிர்பார்ப்பதில்லை. அன்பு ஒன்றை மட்டுமே எதிர்பார்க்கிறார்.

அறிவாலே இறைவனைக் காணமுடியாது சமய சாத்திரங்களை கற்று அதன்படி ஒழுகி ஆத்மீகநிலைக்கு எம்மை உயர்த்திக் கொள்ளும்போதே இறைவனைக் காணமுடியும். அப்போதுதான் அமைதி சாந்தம் என்பன ஏற்படும். அந்தநிலையைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் நற்பேறு கிடைக்க முடியும்.

இன்று உலகம் பலவிதத்திலும் மாறிவருகிறது. சிவனின் சக்தி என்றும் எங்கும் நிறைந்து எல்லோருக்கும் வழிகாட்டி வருகிறது. உண்மையான அன்புடன் செயல்படுவோரை சிவன் காப்பாற்றி வருகிறார். பூமியிலுள்ள ஆன்மாக்கள் அவரை வழிபட்டு நன்னிலையடைய முற்படவேண்டும் என்றார்.

அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரம பிரமுகரும், முன்னாள் உதவி அரசாங்க அதிபருமான திரு சோ. அருணாசலம் சுவாமிகளின் பெருமைகளை எடுத்துக் கூறினார்.

சுவாமிகளில் நாம் இறைவனைக் காண்கிறோம். ஜீவன்முத்தர் நிலையில் அவர் இறைவனாகவே காட்சி தருகிறார். அவரைத் தரிசிக்க கிடைத்தமை எமக்குப் பெரும் பேறாகும். இந்து சமயத்தை உலக நாடுகளில் பரப்பி அருஞ்சேவை ஆற்றிவருவதுடன் திருமந்திரம், திருக்குறள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளிநாட்டாரும் அவற்றைப்போற்ற வழிவகுத்தவர் இவரது வழிகாட்டலில் நாம் இறையருளைப்பெற முயலவேண்டும் என்று அவர் பேசுகையில் கூறினார்.

# நாளை யாழ். நகரில் குறளரசு அரங்கேறுகிறார்



தமிழுக்கும், தமிழ்க் கலைகளுக்கும் மட்டுமே தலைவணங்கும் தந்தைக்கு மகனாகப்பிறந்தவர் எப்படி யிருப்பார்?

—யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை மாலை மிருதங்கத்துடன் 'விளையாட'ப்போகும் சிறுவன் குறளரசுபோல இருப்பான் என்று கண்மூடிக் கொண்டே சொல்லிவிடலாம்!

பதினொன்கு வயதுக்குள், தாளலயங்களையெல்லாம் தன் பிஞ்சு விரல்களிலே 'பதித்துக்'கொண்டிருக்கும் குறளரசு "நம் மனதுக்கு நாம் சரியாக நடந்து கொண்டால் எவருக்கும் நாம் பயப்படத்தேவையில்லையே!" என்று சொல்வதைப் பார்த்தால், எதிர்காலத்தில் அவன் எப்படி இருக்கப் போகிறானோ என்பொரு கேள்விக்குறி. நெஞ்சுக்கு நீதியாக வாழும் வேலணை வீரசிங்கத்துக்கு மகனாகப் பிறந்த குறளரசு பூனையாவானா?

யாழ்ப்பாணம் கலைவரலாற்றில் நீங்கள் நிச்சயம் ஒரு புதுமையைச் சந்திப்பீர்கள்! குறளரசுவின் மிருதங்க அரங்கேற்றத்தோடு, அவன் தம்பிகள் பன்னிரண்டு வயது வேழவேந்தனும், பத்து வயது ஈழகாந்தனும அண்ணனின் தாளத்துக்கு ஆடப்போகிறார்கள்! ஈழத்து சொட்டு முறையில் சிலப்பதிகாரத்தை சிறபி சிவப்பிரகாசத்தின் கைவண்ணத்தில் உருவான 'அரண்மனை' யில் இந்த இளையவர்கள் அளிக்கும் 'விருந்தோடு'வீரசிங்கம் தம்பதிகள், அங்கு வருபவர்களை உங்களை வரவேற்று உபசரிக்கக் காத்திருக்கிறார்கள்!

நீண்டகால இசைஞானமிக்க நாடறிந்த கொழும்புக்கலைஞர் ஏ. எஸ். சந்திரசேகரம் குறளரசுவின் குரு! சகோதரர் ஏ. எம். நாராயணன் கனிரெனப்பாட திருமதி ராஜராஜேஸ்வரி சந்திரசேகரம் வயிலின் வாசிப்பார்! கொழும்புக் கலைப்பிரியா இசைமன்றத்தைச்சேர்ந்தவர்கள் இவர்கள்! அதில் ஒரு அங்கமாக இருந்து ஆடற்கலைக்கு அணிசேர்த்து வரும் நடன ஆசிரியை மஞ்சுளா விஜயரத்தினத்திடம் முறையாகப் பரதம் பயின்று வருகிறார்கள் வேழவேந்தனும் ஈழகாந்தனும்!

நாளைய நாயகனாகத் திகழப் போகும் குறளரசு படிப்பிலும் சூரன்! கொழும்பு வெஸ்லி கல்லூரியில் எட்டாவது வகுப்பில் முதல் மாணவனாகச்சித்தி பெற்றுள்ளான்! புலமைப் பரிசில்களையும் வென்றிருக்கிறான்!

— 'பிரவுண்சன்' வீரசிங்கம் எதைச்செய்தாலும் ஒரு தனித்துவம் இருக்கும். வேலணையூரும் அதில் சேர்ந்துவிட்டால கலைத்துவமும் நிறைந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? நாளை யாழ் வீரசிங்கம் மண்டபம் அப்படித்தான் இருக்குமென்று நீங்கள் நம்பலாம்!

கொழும்பிலும் இதேநிகழ்ச்சியை நடாத்த சர்வதேச நிகழ்ச்சிகள் நடக்கும்பண்டாரநாயக்கா சர்வதேசமகாநாட்டு மண்டபத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் வீரசிங்கம்! கலையைக் கௌரவிக்கிறார்!

நாளையாழ் வீரசிங்கம் மண்டப நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்துத்தருகிறார் வானொலி. டி வி. அறிவிப்பாளர் வி. என். மதியழகன்!

வேலணை வீரசிங்கம், அன்னலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வன் குறளரசுவின் மிருதங்க அரங்கேற்றம் வெற்றி பெற நாமும் வாழ்த்துவோம!

- ஷர்மினி.

## கைலாஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இறப்பதற்கு இரு வாரகாலத்துக்கு முன்னர் கைலாஸ் எனக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார். தான் கொழும்புக்கு வைத்திய பரிசோதனைக்கு செல்வதாகவும், இரண்டு வாரத்தில் திரும்பிவருவதாகவும், இரு வாரத்துக்கு லீவு தந்துதவும்படியும் அக் கடிதத்தில் கேட்டிருந்தார். அவர் கடிதத்தில் குறிப்பிட்டபடி, திரும்பிவரவே இல்லை. அவர் மறைவு தனிப்பட்டமுறையில் எனக்குத் தாங்கமுடியாத ஒன்று" என்றார்.

### விட்ட பணியை தொடர்வோம்

தலைமைவகித்த திரு. இ. சிவகுருநாதன் பேசுகையில், கைலாசபதியும் நானும் ஒன்றாகவே படித்தவர்கள். அவருடன் ஒரே பத்திரிகையில் பணியாற்றினேன். அவர் எண்ணங்களை. லட்சியங்களை ஓரளவு உணர்வேன். அவரது சிந்தனைகளையும், விட்டுச் சென்ற இலட்சியங்களையும் தொடர்ந்துசெய்வோம் என்று கூறினார்.

பிரபல எழுத்தாளரும், 'குமரன்' ஆசிரியருமான திரு. கணேசலிங்கன் பேசுகையில், கம்பனும் பாரதியும் கவிதைத் துறையில் இன்று தமிழர் நெஞ்சங்களில் நிலைத்து எப்படி உயர்ந்து நிற்கிறார்களோ அதேபோன்று விமர்சனத் துறையிலும் தனிஇடத்தைப் பிடித்து நிலைத்துநிற்கக்கூடியவர் கைலாசபதி. அவர் மறைவு என்னை மிகவும் பாதித்துவிட்டது" என்று குறிப்பிட்டார்.

கலை இலக்கிய பத்திரிகை நண்பர் சங்கச் செயலாளர் திரு. [illegible] எஸ். திருச்செல்வம் பேசுகையில், கைலாஸ் நினைவாக செ. கணேசலிங்கன் முயற்சியால் வெளியிடப்பட்டுள்ள இலக்கிய சிந்தனைகள் நூலை வாங்குவதன்மூலம் அவரை நாம் கௌரவிக்கலாம் என்றார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பேசுகையில் கூறியதாவது:-

"கைலாஸ் நவீன முற்போக்கு நோக்கினைக் கொண்டவராயிருந்தார். சமகால சமூக, அரசியல் பிரச்னைகளில் அவர் ஈடுபாடு கொண்டிருந்தார், இளம்எழுத்தாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அவர் ஒரு அறிவூற்றாக அமைந்து, அவர்களது சிருஷ்டியின் ஆற்றலினை வளர்க்க உதவினர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினை தாபிக்கவும் அதற்குரிய வடிவத்தினை அளிக்க உதவியோருள் கைலாசும் ஒருவராவார்".

கைலாசபதிக்கு கவிதாஞ்சலியும் செலுத்தப்பட்டது. கவிஞர்கள் சில்லையூர் செல்வராசன், முருகையன, காரை சுந்தரம்பிள்ளை, சொக்கன் புதுவை இரத்தினதுரை ஆகியோர் இந் நிகழ்ச்சியில் பங்குபற்றினர்

விழா அமைப்பாளர் திரு. எம். செல்வராசா நன்றி கூறினார்.

# பக்தி சூழ்நிலையில் சுவாமிகளின் ஜயந்திவிழா

[மாவிட்டபுரம்]

அமெரிக்க சைவ சித்தாந்த திருச்சபைத் தலைவர். ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளது 56 ஆவது ஆண்டு ஜயந்தி விழா அளவெட்டியில் பக்தி பூர்வமான சூழலில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அமெரிக்காவிலிருந்து தமது 40 சீடர்களுடன் வருகை தந்திருந்த சுவாமிகள் அளவெட்டி கும்பிளாவளை விநாயகர் ஆலயத்திற்கு முதலில் சென்று வழிபாடு செய்தார். விநாயகர் ஆலய நிர்வாகத்தினரும், தொண்டர் சபையினரும் மாலை சூட்டி பெரு வரவேற்பளித்தனர்

ஆலய வீதியில் ஆலயதீர்த்த குளம் அமைப்பதற்கான வேலைகளை சுப்பிரமுனிய சுவாமிகள் ஆரம்பித்து வைத்தபின் அங்கிருந்து ஊர்வலமாக சுப்பிரமுனிய ஆச்சிரமத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

வீதி நெடுக மகர தோரணங்களும், பூரண கும்பங்களும் காட்சியளித்ததுடன் அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரம மாணவர்கள் சுமார் 500 பேர் வரை வீதியின் இருமருங்கும் நின்று மலர் தூவி வரவேற்பளித்தனர்

ஆச்சிரமத்திலிருந்து சுவாமிகள் தமது சீடர்களுடன் அருகிலுள்ள சிவலிங்க சுவாமி ஆலயத்திற்கு எழுந்தருளினார்.

அங்கு ஜயந்தி விழா இடம் பெற்றது. வேதபாராயணம், திருமுறை ஓதுதல், மங்கள இசை ஆகியவற்றுடன் விசேட அபிடேக ஆராதனைகளும் பாதபூசையும் அங்கு இடம் பெற்றன.

இவற்றையடுத்து ஏராளமான அடியார்கள் சுவாமிகளது பாதத்தை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்.

## மக்கள்சேவை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமான முறையில் அவர்களின் நல்வாழ்வில் அக்கறை கொள்வது சாவகச்சேரி லயன்ஸ் கழகம். இக்கழகம் செய்யும் மகத்தான தொண்டு ஊர் அறியும். மேலும் இக்கழகம் கல்வியில் சிரத்தை காட்டுவதும், சிறுவரை நல்வழிப்படுத்துவதும், வறியோருக்கு உதவி செய்வதும் இக்கழகத்தின் சிறந்த தொண்டுகளாகும் இதேபோன்று வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள கழகங்கள் தம் மக்களுக்கு பல நன்மைகளை செய்து வருகின்றது.

இலங்கையில் இயங்கிவரும் லயன்ஸ் கழகங்கள் அனைத்தையும் இரண்டு பிராந்தியமாகப் பிரிக்கப்பட்டு அவற்றுக்கு முறையே இரு ஆளுனர்கள் வருடாவருடம் ஜனநாயக முறையிலே தெரிவு செய்யப்படுகிறார்கள். ஒரு பிராந்தியத்துக்கான ஆளுனர் வைத்திய கலாநிதி ஆரியம் நல்லையா அவர்களாகும். தனது பிராந்திய கழகங்களுக்கு அவர் ஒரு முறையாகுதல் சென்று வருவது அவசியமாகும் வடமாகாணத்துக்கான பிரதி ஆளுனர் லயன். பி தெய்வேந்திரன் அவர்களாகும். இவரே இப்போது வடமாகாணக் கழகங்களை மேற்பார்வை செய்து வருகிறார்

இம்மாதம் 9ம்திகதி ஞாயிற்றுக்கிழமை வடபகுதிம வட்டகலந்துரையாடல் காலைதொடக்கம் கைதடி நபீல்ட் குருடர் செவிடர் பாடசாலையில் நடைபெறவுள்ளது தற்கு இலங்கை அடங்கிலிருந்தும் பல லயன் உறுப்பினர்கள் வருகை தரவுள்ளனர். ஆளுநர் வைத்திய கலாநிதி அரியம் நல்லையா அவர்களும் சமூகந்தருவார். வடபகுதி லயன்ஸ் கழக உறுப்பினர் யாவரும் அவர்கள் தலைமையில் இக்கருத்தரங்குக்கு தவறாது வருவார்கள் பிரதி ஆளுனர் லயன் பி தேவேந்திரம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது. கடந்த ஆறு மாதகாலமாக நிறைவேற்றப்பட்ட சேவைகளும் அதில் ஏற்பட்ட கஷ்டங்களும் மேலும ஆறு மாதத்துக்கு நிறைவேற்றப்படும் சேவைகளும் அவற்றை திறம்பட நிறைவேற்றுவதற்கான வழிவகைளும் அலசி ஆராயப்படும்.

# "வடக்குதெற்குஎன்றபாகுபாடு அரசுக்குக் கிடையாது"

## -நீதி அமைச்சர்

(காலி)

"வடக்கில் வன்செயல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், வடக்கு தெற்கு, என்ற பாகுபாடு காட்டாது இன்றைய அரசு சகல இடங்களுக்கும் சகலஇன மக்களுக்கும் சமநீதியாக அபிவிருத்தி வேலைகளைக் குறைவின்றிச் செய்துகொண்டிருக்கின்றது. இது தனது கடமை என்பதை உணர்ந்து அரசாங்கம் செயல்படுகின்றது"

மேற்கண்டவாறு அம்பாந்தோட்டைமாவட்டத்திலுள்ள தங்காலை என்ற இடத்தில் இங்குள்ள நகரசபை மண்டபத்தில் மேல் நீதிமன்றப் பகுதியை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும்போது நீதி அமைச்சர் திரு. நிஸ்ஸங்கா விஜேரத்ன கூறினார்.

"மேலும்அவர்பேசும்போது "நாட்டை ஆட்சிசெய்யும் எந்த அரச நிகழும் நீதிக்குத் தலைவணங்கி தார்மீகமுறையில் மக்களுக்கு நல்லாட்சியை அளிக்கக்கடமைப்பட்டுள்ளது. சமூகங்கள் பலவீனமடையும்போது தான் நாட்டில் குற்றங்கள் அதிகரிக்கின்றன. சமூகத்தில் நடைபெறும் குற்றச் செயல்களை நீதியின் முன் எடுத்து நிலைநாட்ட மக்கள் அஞ்சக் கூடாது.

இன்றைய அரசாங்கம் நீதிக்குக் தலைவணங்குகிறது. நீதிச்சேவை சீரானமுறையில் நடைபெற தன்னால் வழங்கக்கூடிய அத்தனை ஒத்துழைப்புகளையும் வழங்கப் பின்நிற்காது

இக்கூட்டத்தில் தங்காலை எம் பி திரு. ஜினதாஸ வீரசிங்ஹ பிரதமந்திஅரசர் திரு நெவில்சமரகோன், நீதிச் சேவையின் மேலதிகச் செயலாளர் திரு மேவின் விஜேசிங்ஹ உட்படமற்றும் பலரும் பேசினர்.

---

வசாவிளான் பகுதியில்

# திருட்டுக்களை முறியடிக்க பொதுமக்கள் நடவடிக்கை

[மாவிட்டபுரம்]

வசாவிளான் பகுதியில் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்துப் பொதுமக்கள் பீதிக்குள்ளாகி வருகின்றனர்.

கடந்த சில வாரங்களாக இரவு நேரங்களில் திருடர்கள் நடமாடி வசாவிளான் பகுதியில் தமது கைவரிசையைக் காட்டி வருகிறார்களாம்.

வசாவிளான ப. நோ. கூ. சங்கக் கிளையிலும் இங்குள்ள ரேடியோ கடையொன்றிலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகவும் ஆடு, மாடுகள் களவாடுவதிலும் அவர்கள் ஈடுபடுவதாகவும் ரங்கேசன்துறைப் பொலிசில் பொதுமக்களால் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இரவு நேரங்களில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோர்மீது கண்காணிப்பு செலுத்த அப்பகுதி பொதுமக்களும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இப்பகுதியில் ஊர்காவல் படையை அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசிடமும் பாராளுமன்ற உறுப்பினரிடமும் இது பற்றிக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

# சாயிபாபா ஆசிரமத்துக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் அமைக்கப்படவிருக்கும் ஸ்ரீ பகவான் சத்திய சாயிபாபா இல்ல ஆரம்ப விழா இம்மாதம் 10-ம் திகதி திங்கட்கிழமை மாலை ஆரம்பிக்கப்படவுள்ளது


யாழ் மாநகரசட்சி மன்ற முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தம்பதிகள், குத்துவிளக்கேற்றி இந்த இல்லத்தை திறந்துவைக்கவுள்ளார்.

நான்கு லட்சம் பெறுமதியுள்ள இந்த இல்லத்தை காலஞ்சென்ற நல்லூர் நல்லலக்ஷ்மி, சாயிபாபா ஆசிரமத்துக்கென அன்பளிப்பாக வழங்கியிருந்தார். (மா)

---




# உங்கள் உணவிற்குள் சிறிதளவு அஜி-நொ-மோட்டோ தூவுங்கள்!




நீங்கள் சமைப்பது இறைச்சிக் கறியாக இருக்கலாம், மரக்கறியாக இருக்கலாம் அல்லது சாதாரண தேங்காய்ச் சம்பலாகவும் இருக்கலாம். சோறு, பொரியல், அவியல், கஞ்சி அல்லது எதுவாகவும் இருக்கலாம். உங்கள் சமையல் எதுவாக இருந்தாலும் சிறிதளவு அஜி நொ மோட்டோவைத் தூவி உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குங்கள். கரும்பு, பீட்றூட், மரவள்ளி முதலியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து எடுக்கப்படும் அஜி நொ மோட்டோவை உலகெங்கிலும் 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.

சந்தைப்படுத்துவோர்:
கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு
விலை: ரூ. 1/10 லிருந்து

味の素 அஜி-நொ-மோட்டோ

உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Grant K & E 4692


---

பூம்புகார் கொலை வழக்கு:

# எதிரிகள் ஏழு பேரும் பிணையில் செல்ல அனுமதி!

(யாழ்ப்பாணம்)

அரியாலை பூம்புகார் கொலை வழக்கில் 7 எதிரிகளும் யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஜே ஜி ஆசீர்வாதத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கில் 82ம் மார்ச் 20ல் பூம்புகாரை சேர்ந்த சவரிமுத்து மோசஸ் என்பவரை, அதே ஊரைச்சேர்ந்த நா. தியாகராசா. ஐ. இரத்தினம், பொ மகேந்திரன் அல்லது கட்டைச்சி, பொ. குலேந்திரன் அல்லது செல்வம், ப. துரைசிங்கம் அல்லது செட்டி, மா. மகேந்திரராஜா அல்லது பவி, ம விஜயகுமார் அல்லது விஜயன், ஆகியோர் வாளால் வெட்டியும் பொல்லுகள் கம்பிகளால் அடித்தும் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் பி சபாரத்தினம், சட்டத்தரணி ரி. லிங்கராசாவின் உத்தரவுடன் ஆஜரானர்.

எதிரிகள் ஏறக்குறைய 6 மாதங்கள் ரிமாண்டில் இருக்கின்றார்களென்றும், இந்த சம்பவம் ஒரு கோஷ்டி சண்டையென்றும், இந்தஎதிரிகள்தான் ஈடுபட்டார்கள் என்று கூறுவதற்கு போதிய சாட்சியங்கள் இல்லையென்றும், இறந்தவர் சம்பவம் நடந்து 4 நாட்களின் பின் தான் இறந்தார் என்றும் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் பிணை அனுவிசாரணையின் போது கூறினர்.

நீதிபதி 1ம், 3ம், 4ம், 7ம் எதிரிகளை தலா 3500 ரூபா பிணையிலும் 2ம், 6ம் எதிரிகளை தலா 5000ரூபா பிணையிலும் செல்ல அனுமதித்தார் (க)

---

வவனியாவில் சிறுதானிய அறுவடை:

# தரகர்கள் கெடுபிடியால் விவசாயிகள் கவலை

(வவனியா)

வவனியாப் பகுதியில் சிறுதானியங்கள் அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்காகச் சந்தைக்கு வரத்தொடங்கியுள்ளது இதனையடுத்து வவனியா நகரில் பஸ் நிலைய முதல் முக்கிய சந்திகளில் தரகர்கூட்டம் நடமாடுவதை காணமுடிகின்றது.

உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை நல்ல விலைக்கு விற்கமுடியாத நிலையில் தரகர்கள் கள்ளத் தராசு வைத்து விளைபொருட்களைக் கொள்வனவு செய்து வருவதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

குறிப்பாகத் தட்டாப்பயறு, உழுந்து, சோளன் போன்ற தானியங்கள் சந்தைக்கு வரத்தொடங்கியுள்ளன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரகர்களின் கெடிபிடிபற்றிக் கவனத்தில் கொள்வார்களா? என்று மக்கள் அங்கலாய்க்கின்றார்கள். [வ]

---

பஸ் இல்லாததால்

# முறைபீடுசெய்த பிரயாணி தாக்கப்பட்டாராம்

## விசாரணைக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நீண்ட நேரமாகப் பஸ் இல்லாததால் யாழ்ப்பாணம் பஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறையீடு செய்த பிரயாணி ஒருவர் மேற்படி பஸ் நிலைய அலுவலக உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து உயர்மட்டவிசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தாக்குதலுக்குள்ளான பிரயாணி உயர்நீதிமன்ற உத்தியோகத்தர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ் பஸ் நிலையத்தில் நடந்த இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக வட பிராந்திய உதவிப் பொலிஸ் அதிபருக்கும், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பணிப்பாளருக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது; பஸ்வண்டிக்காக சுமார் இரண்டுமணி நேரம் தமது மனைவியுடன் காத்து நின்ற உத்தியோகத்தர் பஸ் வண்டி வராததால் பஸ் நிலைய அலுவலகத்திற்குச் சென்று முறையீடு செய்ததாகவும் அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தின்போது தாக்கப்பட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்புகாரின்மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கும் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

[வண். நிரு]

---

# இளம் விவசாயி தற்கொலை

[கிளிநொச்சி]

பசளை போட மனைவியிடம் காசு கேட்டார் கணவர். பசளை போடாது கணவன் குடிப்பார் எனக் கருதிய மனைவியோ காசைக் கொடுக்க மறுத்தாள். மனைவியிடம் பலாத்காரமாக காசைப் பறித்துச் சென்ற கணவனே நஞ்சைப் பருகி மனைவியின் முன்னே மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

இச்சம்பவம் விஸ்வமடு புன்னைநீராவி என்னும் இடத்தில் நடைபெற்றுள்ளது மரணமானவர் ரி இராமலிங்கம் [29 வயது]என்பவராவார் இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி திரு மு யோகலிங்கம் மேற்கொண்டார் சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸை சேர்ந்த திரு. இராமசாமி ஆஜர் செய்தார் மரணமானவரின் மனைவி சாட்சியமளித்தார்.

தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

(அ)

---

வவனியாவில்...

(3-ம பக்கத் தொடர்ச்சி)

சார்த்தமாகக் கோதுமைப் பயிரும் உற்பத்தி செய்யப்பட்டபோதிலும் போதிய மழையில்லாததினால் எதிர்பார்த்த பயனைப் பெற முடியாதிருப்பதாகக் கூறப்படுகிறது [அ]

வெள்ளி மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு2-30
ஜெமினி-சாவித்திரி
கற்பகம்

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மென் கலர்)

றீகன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
CAPTAIN AMERICA

இன்னும் சில தினங்கள்
றீகல் (யாழ். நகர்)
நான் (ஈஸ்ட்மென் கலர்)
விரைவில்
எங்கவீட்டுப்பிள்ளை

மனோகரா
(யாழநகர்) தினசரி10-30, 2-15, 4-45, 7-00, 9-30.
MELGIBSON in
MAD MAX 2
(Action packed thriller—Adults Only)

சாந்தி யாழ்நகர் 7 — 11-1-83
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
CLINT EASTWOOD in
ESCAPE FROM ALCATRAS
Dont miss this' ACTION PACKED Color Movie

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
8-1-83 வரை
சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்
9-1-83 முதல் ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணிவரை ஆசனங்கள் முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.
காதல் என்பது தெய்வீகமானது. இந்த தெய்வீகத்தின் ஆலயமாக விளங்கும் வசந்த மாளிகையை இன்றே பாருங்கள். ரசிகப்பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி.
சிவாஜி வாணிஸ்ரீ
பாலாஜி, நாகேஷ்
நடித்த
"வசந்தமாளிகை"

## தெல்லிப்பழையில் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

(மயிலிட்டி)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் நடத்தும் உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்ற சுற்றுப் போட்டி போட்டிகளிலிருந்து கால், அரை இறுதிப் போட்டிக்குரிய கழகங்கள் தெரியப் பட்டிருக்கின்றன.

மேற்படி கால் இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் கழகங்கள் முறையே யாழ்ப்பாணம் முஸ்லீம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தும், காங்கேசன்துறை யங்ஸ்ரேயஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தும் அரை இறுதியில் மோதுகின்றன. அரை இறுதிப் போட்டிகள் 8ம் 9ம் திகதிகளில் நடைபெறும்.

மேற்படி அரை இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுக்கான இறுதி மோதல் தைப்பொங்கல் தினத்தன்று மாலை 3-45 மணிக்கு நடைபெறும். இப் போட்டிகள் அனைத்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்திலேயே இடம்பெறும்.

# மதகுருமார், விரிவுரையாளர் மீது விரைவில் வழக்குத் தாக்கல்!

## ஜனாதிபதி ஜே. ஆர். அறிவிப்பு

(கொழும்பு)

மதகுருமார், விரிவுரையாளர் தம்பதி, டாக்டர் ஆகியோர் மீது விரைவில் வழக்குத்தாக்கலாகுமென்று ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.

பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில், ஜனாதிபதி திரு ஜே, ஆர் ஜயவர்த்தன உரையாற்றும்போதே இந்தத்தகவலை வெளியிட்டார்.

குருநகர் ராணுவமுகாமில் காவலில் வைக்க பட்டு இப்போது கொழும்புச் சிறைச் சாலையில் வைக்கப்பட்டுள்ள மதகுருமார், விரிவுரையாளர் தம்பதி டாக்டர், ஆகியோர்களது விசாரணைகள் பூர்த்தியாகும் கட்டத்தில் உள்ளது. என்றும், சிறையில் இருக்கும் இவாகள் மீதுவழக்கு விரைவில் தாக்கலாகும் என்ற தகவலை வெளியிட்டார். (இ)

## யாருடையது?

யாழ்ப்பாணம் — கைதடி பாதையில் பிரயாணம் செய்யக்கூடிய பஸ், சீசன் ரிக்கட் ஒன்றினைக் கண்டெடுத்து யாழ். கொட்டடியைச் சேர்ந்த திரு. ஆர். சேகர் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## நன்றி

[யாழ்ப்பாணம்]

"உலகசாதனை நிகழ்ச்சியின் போது யாழ். நகரில் எனக்கு மிகவும் ஒத்துழைப்பும், சகல விதத்திலும் உற்சாகமும் அளித்த சகலருக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று ஆழிக்குமரன் ஆனந்தன் விடுத்துள்ள செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சாதனை நிகழ்ச்சியின்போது பாட்டுப்போட்டியில் உடுப்பிட்டியைச் சேர்ந்த ஈ. கந்தசாமி, மானிப்பாயைச் சேர்ந்த பி. ஜீவகுமாரி ஆகியோர் பரிசு பெற்றதாக ஏற்பாடுகளைச் செய்த உழைப்பாளர் திரு சண்முகராசா அறிவித்துள்ளார்.

## சமாதான நீதவான்



உடுவிலைச் சேர்ந்த திரு. வீமர் இராஜதுரை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி க. சி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் யாழ். மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சுகாதாரத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் இவர், மானிப்பாய் மெமோறியல், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிகளின் பழைய மாணவரும், மெமோறியல் கல்லூரியின் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட இராணிச் சாரணரும். இக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தினதும், பழைய மாணவர் சங்கத்தினதும் நிருவாகசபை உறுப்பினருமாவார் சமூக சேவையாளரான இவர் இலங்கை வைத்திய ஆய்கூட நுண்ணாய்வாளர், சங்கத்தின் வடபிரதேச நிருவாகசபை உறுப்பினரும் ஆவார். [மா]

# யாழ்ப்பாணத்தில் 2-வது கண்தானம்

## உடல்: பல்கலைக்கழகத்துக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரண்டாவது தடவையாக நேற்றுக்கண்தானம் செய்யப்பட்டது யாழ்ப்பாணம், சென்பற்றிக்ஸ் ரோட்டில் வசித்த திருமதி ஜோசெப்பின் இரு கண்களும் யாழ். லயன்ஸ் கழகத்தினால் தோற்றுவிக்கப்பட்ட யாழ் கண்தானச்சங்கத்திடம் வழங்கப்பட்டன. அத்தோடு அந்தப் பெண்மணியின் விருப்பப்படி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அவரது உடல் வழங்கப்பட்டது

டாக்டர் சரவணபவானந்தன் கண்வைத்திய நிபுணர் டாக்டர் நிர்மலானந்தன் ஆகியோர் கண்களைப் பெற்றுக்கொண்டார். மிகுந்த பாதுகாப்புடன் கண்கள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 23ந் திகதி
வெள்ளிக்கிழமை
[7—1—83]

மேடம்; சிக்கல்களை மேற்கொள்வதற்குச் சிறந்த நடவடிக்கைகளை எடுப்பீர்கள் குடும்பத்தில் பொறுப்புணர்ச்சி அதிகரிக்கலாம் எதையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளவும்.

இடபம்: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடு வீர்கள் சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம் நண்பர்களாலும் நட்டமடைவீர்.

மிதுனம்: தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும் சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம் பொதுப் பணியில் ஈடுபடுவதன்மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

கடகம்: மதிப்பு உயர்வும் கிடைக்கும் இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும் உழைப்பினால் உற்சாகமும் பிறக்கும் முன்னேற்றமான தினம்.

சிங்கம்: நிதி - நிலைமையில் விரும்பத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது வணிகர்களாயின் அதிக ஆதாயத்தைப் பெறுவர் புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள்.

கன்னி: எதிலும் தடுமாற்ற நிலை ஏற்படும் குசுகுசுப்புப் பேச்சுக்கள்மூலம் அவதூறுகள் வரலாம் விவசாயத் துறையில் மந்தநிலை காணப்படுகின்றது உடல்நலத்தைப் பேணவும்.

துலாம்: அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டி வைக்கும் அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம் எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக் குறைக்கும்.

விருட்சம்: பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவை ஏற்படுத்தும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் பேச்சில் நிதானம் பெருமையைத் தரும்,

தனு: பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம் முகமன் பேசுவோர் விடயத்தில் முன்எச்சரிக்கையுடன் இருக்கவும் அதிக சிந்தனைக்கு இடமளியாது நடக்கவும்.

மகரம்; ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும் வாகனத்தின்மூலம் அதிக பொருள் வரவுக்கு இடமுண்டு விளைபொருள் விருத்தியும் வியாபார முன்னேற்றமும் உண்டு.

கும்பம்: புதிய வழிகள் மூலம் வரவுக்கு இடமுண்டு சிலருக்கு குடும்பத்தில் இனிமை தவழும் பிள்ளையொன்றின் கல்வியிலும் அதிக கவனம் செலுத்தப்படும்.

மீனம்; தொழில் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் நண்பர்களின் சகவாசத்தால் சிக்கல்கள் மத்தியில் மாட்டிக் கொள்ள நேரிடும் நடுநிலைமை நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# "உப-அலுவலகப் பொருட்கள் மாவட்டசபைக்கு வருவதை தடைசெய்யவேண்டும்"

[மன்னார்]

மாவட்ட அபிவிருத்தி சபை அமைக்கப்படுவதற்குமுன்கிராமாட்சி மன்றங்களினால்தேடப்பட்ட பொருட்களே இன்று உப அலுவலகங்களில் இருக்கின்றன இவற்றை தமது தேவைகளுக்காக மாவட்டஅபிவிருத்தி சபைக்கு எடுத்துவருவதை தடைசெய்ய வேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் உரையாற்றிய மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு வி. கைலாசபிள்ளை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது: பின்தங்கிய பகுதிகளிலுள்ள உப அலுவலகங்களிலுள்ள பொருட்களை அபிவிருத்திசபையின் அலுவலகத் தேவைகளுக்கு எடுத்து வருவதால் உப அலுவலகப்பகுதியிலுள்ளோர் தமது தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியாத நிலை ஏற்பட்டுவருகிறது

உப அலுவலகம் ஒன்றில் உள்ள ஒருபொருளை மாவட்ட அபிவிருத்தி சபை பாவிக்க வேண்டுமானால் உப அலுவலகத்தில் வைத்தே அப்பொருளைப் பாவிக்கவேண்டும் அல்லது மாவட்ட அபிவிருத்திசபை தமது அலுவலகத்திற்கு வேண்டிய பொருட்களைக் கொள்முதல் செய்யவேண்டும்.[வ]

# காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை விபத்தில் ஒருவர்பலி! ஐவர் ஆஸ்பத்திரியில்!

மாவிட்டபுரம்!

காங்கேசன்துறை தொழிற்சாலை மூன்றும் கட்டத்தில் நேற்று இடம்பெற்ற டிராக்டர் விபத்தில் ஒருவர் பலியானூர்; ஐவர் கடும் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டுள்ளனர் இறந்தவர் எஸ். அருமைத்துரை (40 வயது).

நேற்று முன்தினமே இச்சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;-

தொழிற்சாலையின் மூன்றும் கட்டத்தில் தனியார் டிராக்டர் ஒன்று பெட்டியை இணைத்தபடி வந்துகொண்டிருந்தது பெட்டிக்குள் காஸ் சிலிண்டர்கள் இருந்தன அத்தோடு ஐவர் பெட்டிக்குள் இருந்தனர். டிராக்டர் வேகமாக வந்துகொண்டிருந்தது வளைவொன்றில் திரும்பிய போது, டிராக்டருடன் இணைக்கப்பட்டிருந்த பெட்டி புரண்டது. 'காஸ்'சிலிண்டர்கள் சிதறின, நெரிபாட்டுக்குள் பெட்டிக்குள்ளிருந்த ஐவரும் சிக்கினர். இவர்கள் அவசரமாக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஒருவர் அங்கு மரணமானூர். மற்றையோர் சிகிச்சை பெறுகின்றனர்

மரண விசாரணை நடைபெறுகிறது. (உ)

---

## தேசிய கலை இலக்கியப் பேரவை

## கைலாசபதிக்கு நாளை அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவை நாளை சனிக்கிழமை பிற்பகல் யாழ் றிம்மர் மண்டபத்தில் மறைந்த தமிழறிஞர் பேராசிரியர் க. கைலாசபதிக்கு அஞ்சலிக்கூட்டம் நடாத்த உள்ளது இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் உதவித் தேர்தல் ஆணையாளர் திரு. அ. ஜெயரத்தினம் தலைமை தாங்குவார். இக்கூட்டத்தில் திருவாளர்கள் சி. வி. வேலுப்பிள்ளை, இ. முருகையன், மா சின்னத்தம்பி, எம். ஏ. நுஃமான் சி. மௌனகுரு, ம. சண்முகலிங்கம், ந நடனசபாபதி, கே. செந்திவேல், எஸ் இராஜேந்திரன், திருமதி சித்திரலேகா மௌனகுரு ஆகியோரும் உரைநிகழ்த்துவார்கள். கவிதை அஞ்சலியும் இடம்பெறும். (அ)

---

## வசாவிளானில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனது கணக்கை முடித்துக் கொண்டு வீடு சென்றிருந்தார்

இதனையடுத்து மேற்படி கடையில் 45 ஆயிரம் ரூபா சோர்வு ஏற்பட்டதாகக் கூறி கடைக்காரர்கள் நாரந்தனைக்குச் சென்று மேற்படி வாலிபரையும், அவரது தந்தையாரையும் நாரந்தனையிலிருந்து ஏமாற்றி வசாவிளானுக்குக் கூட்டி வந்தனராம். வசவிளானில் வைத்து கடையில் ஏற்பட்ட சோர்வு பற்றி அவர்களிடம் தெரிவிக்கப்பட்டபோது அவர்கள் மறுக்கவே தந்தையை வசாவிளானிலுள்ள வீடொன்றிலும், மகனைக் குப்பிளானில் உள்ள வீடொன்றிலும் கடத்திச் சென்று பூட்டிவைத்தனராம். இரண்டு தினங்கள் இவர்கள் இப்படிப் பூட்டி வைக்கப்பட்டனராம்.

குப்பிளானில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வாலிபரிடம் வாளைக்காட்டி அங்கம் அங்கமாகச் சித்திரவதை செய்வதாக பயமுறுத்தி மேற்படி கடையின் சோர்வுக்கு அவரே காரணமென ஒப்புக்கொள்ளுமாறும் கடைக்காரரின் சகோதரர் ஒருவரின் மகளைக் கெடுத்ததாகவும் பயமுறுத்தி அந்த வாலிபரிடம் 15 ஆயிரம் ரூபா செலுத்துவதாக ஒப்புக்கொள்ளும் நோட்டு ஒன்றையும் பெற்றுக் கொண்டனராம்.

இதே நேரம் வசாவிளானில் தடுத்து வைக்கப்பட்ட வாலிபரின் தந்தையிடம் 20 ஆயிரம் ரூபா செலுத்துவதாக ஒப்புக்கொள்ளும் நோட்டு ஒன்றையும் பெற்றுக் கொண்டனராம். அத்துடன் அவரை நாரந்தனைக்குச் சென்று உறுதி ஒன்றை எடுத்துவந்து பொறுப்புத் தருமாறும் கேட்டனராம்.

இதனையடுத்து வாலிபரின் தந்தை நாரந்தனைக்குச் சென்று வருவதாகக்கூற அவர்கள் அவர் செல்வதற்கு அனுமதித்தனராம்.

அவர் நேரே காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்திற்குச்சென்று நடந்த சம்பவத்தை விபரித்துக் கூறினர்.

காங்கேசன்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சி. ஐயாத்துரை, சார்ஜண்ட், வி. தியாகராஜா, கான்ஸ்டபிள் திருக்குமார் ஆகியோர் இதுகுறித்து உடனடி விசாரணையிலீடுபட்டு குப்பிளானில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வாலிபரை மீட்டதுடன் வசாவிளான் கடைஉரிமையாளரை கைதுசெய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

---

## குற்ற ஒப்புதல்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சட்டத்தரணி என் சத்தியேந்திராவும், பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுனில் டி சில்வாவும் தொகுப்புரையை நிகழ்த்தினர்

ஆறு நாட்கள் 'வொயர்-டயர்' என்ற இந்தத் தனி விசாரணை நடைபெற்று நேற்று புல்லர்ஸ் றோட்டில் உள்ள மேல் நீதிமன்றம் நேற்றுக் கூடியபோது இதற்கான தீர்ப்பை நீதிபதி மூனமலை வழங்கினர்.

நீதிபதி அளித்த தீர்ப்பு விபரம் வருமாறு:-

''நீர்வேலிகொலை, கொள்ளை வழக்கில் சிவபாதன் மாஸ்டர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் அளித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இவ் வழக்கில் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளலாம்.

'முதலாம்எதிரி தங்கத்துரை 'வொயர்—டயர்' என்ற தனி விசாரணையில் இங்கு அளித்த சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது முதலாம் எதிரியின் சாட்சியப்படி, நான்காம் எதிரி சித்திரவதை செய்யப்பட்டார் என்பதற்கு ஆதாரமில்லை.

''ஆகவே, நான்காம் எதிரியின் சாட்சிங்கள் சட்டளைச்சட்டத்தின் 24ம் பிரிவை மீறாத வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன

''எனவே, இதனைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 16 (1) 2ம் பிரிவின் கீழ் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளலாம்'

நாளைவிசாரணை தொடர்ந்து நடைபெறும்,

---

## ஆந்திரா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

5,382 வாக்குகள் வித்தியாசத்தால் தோற்கடித்தார்.

### குண்டுராவ் ராஜினுமா

திரு. குண்டுராவ் தோல்வியடைந்ததையடுத்துத் தமது முதலமைச்சர் பதவியை ராஜினுமாச்செய்துள்ளார். இவரின் ராஜினுமாவை கர்நாடக மாநில கவர்னர் திரு கோவிந்நாராயணன் ஏற்றுள்ளார்.

மாற்று ஏற்பாடு செய்யும் வரை திரு. குண்டுராவ்வையும் அவரது அமைச்சர்களையும் பதவியிலிருக்குமாறு மாநிலக் கவர்னர் கேட்டுள்ளார்.

கர்நாடக முன்னுள் அமைச்சர் திரு தேவராஜ் அர்ஸின் புதல்வி சந்திராபிரபாவும் இத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார்.

---

## நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கிலோ சீனியின் ஆகக் கூடுதலான விலை 12ரூபா 50சதமாகும். இவ்விலைக்குக்கூடுதலாகச்சீனியை விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படுமென்று வர்த்தக அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (வெ)

---

## மாலினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலையுண்ட மாலினியின் பிரேதப் பரிசோதனை அறிக்கையையும், வழக்கின் சந்தேகநபரான சிவகுமாரனின் காயங்களின் அறிக்கையையும் சட்டவைத்திய அதிகாரி நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இக்கொலைக்குற்றம் சம்பந்தமான குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பிரேமரத்தினவை இம்மாதம் 24-ம் திகதி கனி நொச்சி நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறும் கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இக்கொலை வழக்கில் சந்தேகநபருக்கு எதிராகப் போதிய குற்றச்சாட்டுச் சாட்சியங்கள் இன்மையால் பொலிசாரைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கடந்த ஆண்டு மே 27ம் திகதி முன்னைய கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் ஜெகசோதி பணித்திருந்தமை தெரிந்ததே. (உ-வெ)

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார்கட்டு இராஜராசேஸ்வரி அம்பாள் சந்நிதியில் இன்றும், நாளையும் மாலை மழைப்பதிகபாராயணம் நிகழவுள்ளது.

---

## திரிபுராவில்

திரிபுரா சட்டசபைத் தேர்தலில் இதுவரை அறிவிக்கப்பட்ட 23 முடிவுகளில் மாக்ஸிய கம்யூனிஸ்கட்சிக்கு 14 இடங்களும், இந்திராகாங்கிரஸுக்கு 4 இடங்களும். புரட்சிகரசோஷலிஸ்ட்கட்சிக்கு 3இடங்களும், சுயேச்சைகளுக்கு 2இடங்களும் கிடைத்துள்ளது. (வெ)

---

## மரண அறிவித்தல்

### ஞேஸ் யோசவ்

ஞேஸ் யோசவ் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற A S யோசவ் (பிரதம தபால் அதிபர் கொம்பனித்தெரு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்தம்மா பஸ்ரியாம்பிள்ளையின் மகளும், காலஞ்சென்ற யோசவ் பஸ்ரியாம்பிள்ளை, காலஞ்சென்ற பேபி தம்பிஐயா, காலஞ்சென்ற டெய்சி பிரான்சிஸ், திருமதி கிறேஸ் கிறிஸ்ரோப்டர், திருமதி லில்லி பாக்கியநாதர் அவர்களின் சகோதரியும், திரு. இவாகு கிறிஸ்ரோப்பர் யுகே (U K) அவர்களின் தாயும், திருமதி சந்திரராணி அவர்களின் மாமியுமாவர். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ் புனித கொஞ்சேஞ்சமாதா சேமக்காலைக்கு 8-01-83 சனிக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

73, கதீற்றல் தெரு, யாழ்ப்பாணம்.

5764

---

## மரண அறிவித்தல்

### திருமதி சேதுப்பிள்ளை சின்னையா

சாவகச்சேரி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி சேதுப்பிள்ளை சின்னையா காலமானூர். இவர் காலஞ்சென்ற பூதத்தம்பி சின்னையாவின் அன்பு மனைவியும், இளைப்பாறிய புகையிரத பொதுமுகாமையாளர் (G M R) மார்க்கண்டு கனகசபையின் அன்புச்சகோதரியும், திருமதி அன்னம் செல்லப்பா, திருமதி பூரணம் முத்துலிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் அருமைத்தாயாரும், திருமதி குணேஸ்வரி பரராஜசிங்கம் (அதிபர், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்) திருமதி புவனேஸ்வரி சண்முகதாசன் (இங்கிலாந்து), திருமதி இராஜேஸ்வரி கனகரத்தினம், திருமதி தங்கேஸ்வரி ஸ்கந்ததாஸ் (இங்கிலாந்து), திருமதி மங்களேஸ்வரி மகேந்திர ரவிராஜ் இங்கிலாந்து, சட்டத்தரணி செல்லப்பா அம்பிகைபாலன் (J. P U M.) திருமதி நிர்மலராணி புலேந்திரன், டுஷ்ராணி, பிரபாகரன், சுவர்ணராணி, நித்தியானந்தன், தயானந்தன் ஆகியோரின் அன்புப்பேத்தியாருமாவார் அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 7-1 83 வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு மட்டுவில் தெற்கில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

தகவல்: செ அம்பிகைபாலன் (சட்டத்தரணி) சாவகச்சேரி,

5763

---

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

இசுசு லொறிக்கு மர, அலுமினிய கூடாரம் (Body) அமைத்தலுக்கான மூத்திரையிடப்பட்ட கேள்வி விலைகள் கோரப்படுகின்றன.

கூடாரத்தின்
நீளம்: 122 4 அங்குலம்
அகலம்; 66 5 அங்குலம்
உயரம்: 72 அங்குலம்
அல்லது அதற்கு அண்மையான.

கேள்வி விலைகளில் மரங்களின் இனம், கனம் பாவிக்கப்படும் இரும்பு, அமினியங்களின் அளவுகள் குறிக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 15-01-1983க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'நிதியாளர்', யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

விலைக்கூறு விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் UJ/F/SK,/15/82 என்ற இலக்கம் குறிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்

06-01-1983. (5762)

---


★ வெளிநாட்டுப் பயணமா?

யாழ்ப்பாணத்திலேயே குறைந்த கட்டணத்தில் எந்த நாட்டிற்கும் விரும்பிய விமானத்தில் செல்ல

★விமான டிக்கட்டுகள்

★பிரயாண காசோலைகள்

(AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

மக்கினென் டிறவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

த. பெ. எண் 92, தொலைபேசி: 24154


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் ... 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri lanka, under number Q S. 100236/81 Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu. Telephone: 22389 — 24126.